உதயன்

விலை ரூபா 6.00

கூடல்:16 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 21 வெள்ளிக்கிழமை (04-05-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:159

வவுனியா தடுப்பு முகாம்களுக்கு நீதிவான் நேரில் சென்று கைதிகளைப் பார்ப்பார்

இராணுவ, பொலீஸ் அதிகாரிகளுக்கு அவரே அறிவிப்பு

வவுனியா,மே 4

வவுனியாப் பகுதியில் உள்ள அனைத்துத் தடுப்பு முகாம்களுக்கும் மாதத்தில் ஒரு தடவை தாம் விஜயம் செய்யவிருப்பதாகவும் -

அச்சமயம் தடுப்புமுகாம்களில் உள்ள அனைத்துக் கைதிகளையும் அங்கங்கே தமக்குக் காண்பிக்க வேண்டுமெனவும் -

வவுனியா, செட்டிகுளம் பிரதேசங்களில் உள்ள சகல இராணுவ முகாம்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கும் வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்.

இது தொடர்பாக தமக்கு அதிகாரமளித்திருக்கும் அவசரகாலச் சட்ட விதிகளின் பிரதிகளையும் அவர் இராணுவ, பொலீஸ் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

☆ அவசரகாலச் சட்ட விதிக ளில 19 (4) ஷரத்தின்படி அங்கீகரிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

உத்தியோகப்பற்றற்ற போர் நிறுத்தத்துக்கு அரசு இணங்கியது?

திருப்தியான மனநிலையுடன் சொல்ஹெய்ம் நேற்று புறப்பாடு

கொழும்பு,மே4

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் நேற்று முன்தினம் இரவு முன்வைக்கப்பட்ட புதிய யோசனைகளால் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

பேச்சுவார்த்தைக் காலத்தில் உத்தியோகப்பற்றற்ற யுத்த நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிக்கலாம் என்று அரசுத் தரப்பு முன்வைத்த யோசனை காரணமாக சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட முட்டுக்கட்டை நிலை சற்று நீங்கியிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசுத்தரப்பும் விடுதலைப் புலிகள் தரப்பும் பின்பற்றிவரும் விடாப்பிடி நிலை காரணமாக சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாகவும் -

இரு தரப்புக்கும் இடையில் சமரச நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமது சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் காண முடியாத நிலையில் - திருப்தியற்ற மனநிலையோடு - நேற்று முன்தினம் மாலை கொழும்பிலிருந்து லண்டனுக்குப் பயணமானதாகவும் -

நேற்றைய உதயனில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

(14 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் பயன்படுத்தியது 62 குழல் றொக்கட் செலுத்திகளா?

பலாலி இராணுவத் தரப்பில் மறுப்பு

யாழ்ப்பாணம்,மே4

"62 குழல் கொண்ட றொக்கட்டுக்களை புலிகள் தாராளமாகப் பயன்படுத்தினர் - யாழ். தளபதி விஜேந்திரா தெரிவிப்பு" என்ற தலைப்பில் கடந்த முதலாம் திகதி உதயனின் முற்பக்கத்தில் பிரசுரமான செய்திக்கு பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தில் இருந்து மறுப்பு ஒன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"அக்கினிச் சுவாலை - I இராணுவ நடவடிக்கையின் போது படையினருக்கு எதிராக 62 குழல்களைக் கொண்ட பல்குழல் றொக்கட் லோஞ்சர்களையும் வேறு நவீன ஆயுதங்களையும் புலிகள் மிகத் தாராளமாக உபயோகித்துத் தாக்கினர் - இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா" - என்று கடந்த முதலாம் திகதிய உதயன் பத்திரிகைச் செய்தியில் தெரி

(14 ஆம் பக்கம் பார்க்க)

தென்மராட்சியில் களப்பலியான மேலும் 21 புலிகளின் விவரம்

வவுனியா,மே.4

கடந்த மாதம் 24 ஆம் திகதி ஸ்ரீலங்கா அரச படைகள் ஆரம்பித்த 'அக்கினி சுவாலை - I' இராணுவ நடவடிக்கைக்கு எதிரான பதில் தாக்குதல் நடவடிக்கையின் போது, தங்கள் தரப்பில் உயிரிழந்த மேலும 21 பேரின் விவரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

அவை வருமாறு:-

- மேஜர் வீரமறவன் (தங்கராசா செல்வநந்தன் - முள்ளியவளை)
- கப்டன் தண்ணிலா (டெனிற் ஜின்சலா - வவுனியா)
- கப்டன் பகீரதி (கிருஷ்ணசாமி ரஞ்சனி - புளியம்பொக்கணை)
- கப்டன் மதிநிலா (சுவரி சுகந்தி - கரியாலை நாகபடுவான்)
- லெப்டினன்ட் ஆதிரை (மகா

(14 ஆம் பக்கம் பார்க்க)

பண்ணையில் பவுஸருடன் மோதி ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,மே4

யாழ்.பண்ணை வீதியில் சைக்கிளில் வந்தவர் படையினரின் பவுஸருடன் மோதுண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்தவரும் நவாலியில் வசித்து வந்தவருமான பெஞ்சமின் சகாயராசா (வயது 35) நான்கு பிள்ளைகளின் தந்தையே இந்த விபத்தில் உயிரிழந்தார்.

இவரின் சடலம் யாழ்.மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(உ-ஒ-15)

சிலை அடிக்கல் நடும் வைபவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே 4

யாழ்நகரில் இன்று இடம்பெறவிருந்த அமரர் விஜேகுமாரதுங்கவின் சிலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளது என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

கட்சியின் மேலிடத்தின் பணிப்பின் பேரில் இந்த நிகழ்வு பிற்போடப்பட்டதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3)

யாழ். மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்

யாழ்பாணம்,மே.4

யாழ்.மாநகர சபை ஆணையாளராக இ.இராமலிங்கத்தை வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் நேற்று முன்தினம் நியமனம் செய்துள்ளார்.

தற்சமயம் இங்கு ஆணையாளராகப் பணியாற்றிவரும் இராசா தணிகாசலம் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி அலுவலகதுக்கு இட மாற்றப்பட்டிருக்கின்றார்.

புதிய ஆணையாளராக நியமனம பெற்றுள்ள இ.இராமலிங்கம் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் உதவிச் செயலாளராக இதுவரை பணியாற்றி வந்தார்.

(உ-3)

நீர்கொழும்புச் சிறையில் உள்ள

280 கைதிகளுக்கும் இன்று பிணை அனுமதி?

கொழும்பு,மே4

குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் நீர்கொழும்பிலும், கொழும்பிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள 280 பேரையும் பிணையில் விடுவிக்கும்படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை நேற்றுக் கூடிய சமயம் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே, அலவி மௌலானா ஆகியோர் இந்த விவகாரத்தை பிரஸ்தாபித்தனர்.

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் நீர்கொழும்பு மற்றும் கொழும்புச் சிறைகளில் 280 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்றும் -

அப்பாவிகளான அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் - இரு அமைச்சர்களும் கோரினர்.

இதைத் தொடர்ந்து பிரஸ்தாப கைதிகளை விடுவிக்கத் தாம் உத்தரவிடுவதாக ஜனாதிபதி அங்கு தெரிவித்தார்.

(உ-3)

இரவு 10 மணிக்குப் பின் மக்கள் மட்டக்களப்பில் நடமாடத் தடை!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரவு பத்து மணிக்குப் பின்னர் மக்கள் நடமாடுவதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

இது தொடர்பான அறிவித்தலை மட்டக்களப்பு இராணுவ சிறப்புத் தலைமையகம் நேற்றுமுன்தினம் விடுத்துள்ளது.

மக்கள் நடமாட்டம் இரவு பத்து மணிக்குப் பின்னர் இருக்கக்கூடாது என்றும் -

நகர்புற மக்கள் அவசரதேவைக்கு வெளியில் செல்ல வேண்டுமானால் 'டோர்ச் லைட்'டுடன் செல்ல வேண்டும் என்றும் -

கிராமப்புற மக்கள் லாம்புடன் செல்லவேண்டும் என்றும் -

அந்த அறிவித்தலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(உ-3-21)

ரயில்வே ஊழியர்கள் திடீர் வேலைநிறுத்தம்

நாடு முழுவதிலும் சேவை ஸ்தம்பிதம்

கொழும்பு,மே4

ரயில்வே ஊழியர்கள் நேற்றுப் பிற்பகல் 3.30 மணி முதல் திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்ததால் நாட்டில் பெரும்பாலான ரயில் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

வெசாக் தின கொண்டாட்டங்களுக்கான சம்பள முற்பணம் வழங்க வேண்டும் என்று ரயில்வே ஊழியர்கள் முன்வைத்த கோரிக்கை தொடர்பாக அரசுக்கும், ஊழியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளின் எதிரொலியாகவே ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் புறப்பட்ட ரயில் சேவைகள் மட்டும் பூர்த்தி செய்யப்படும் என்றும் -

புதிய சேவைகள் ஆரம்பிக்கப்பட மாட்டா என்றும் -

ஊழியர்கள் சார்பில் அறிவிக்கப் பட்டது.

(உ-3)

கிளாலியில் கண்ணிவெடி சிக்கி அதிகாரி, 5 சிப்பாய்கள் காயம்

கிளாலி படை முகாமில் முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் காலை ரோந்துப் பணியில் ஈடுபட்ட படையினர் ஆள்களுக்கு எதிரான இரு கண்ணிகளில் சிக்கினர் அதனால் ஓர் அதிகாரியும் ஐந்துபடையினரும் காயம் அடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

காயமடைந்தவர்கள் உடனடியாக பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் தகவல் நிலையம் தெரிவித்தது.

(உ-3-10)

நிறுத்தாமல் சென்ற வாகனம் மீது பொலீஸார் சூடு! இருவர் மரணம்!!

கொழும்பு,மே4

எம்பிலிப்பிட்டி சூரியவெவப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் பொலீஸாரின் சைகையை மீறி நிறுத்தாமல் சென்ற வான் மீது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அந்த வானில் இருந்த இருவர் உயிரிழந்தனர்; மூவர் காயமடைந்தனர்.

பிரஸ்தாப வானைச் சோதனையிட்ட சமயம் அதில் இருந்து தாங்கள் ஆயுதங்களை மீட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

(உ-3)

இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் முதலில் ஒடுக்குமுறைகளை நீக்க வேண்டும்

மகேஸ்வரன் எம்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,மே4

ஜனாதிபதி சந்திரிகாவும் அவ ரது அரசும் உண்மையில் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் பழையவற்றை மறந்து தமிழர்கள் மதான அனைத்து ஒடுக்குமுறைகளை யும் நீக்கவேண்டும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கோரியுள்ளார். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள தனது அலுவலகத் தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலில் விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும்; சர்வதேசம முழுவதும் அரசும் அமைச்சர் கதிர் காமரும் செய்துவரும் விஷமப் பிர சாரங்கள் நிறுத்தப்படவேண்டும்.

வன்னி மற்றும் குடாநாடு உட் பட அனைத்துப் பகுதிகளுக்கும் பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் சென்றுவர அனுமதிக்கப்பட வேண் டும்.

தற்பொழுது வழங்கப்படும் வேலை வாய்ப்புக்கள் தகுதி அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களுக்கும் தென் னிலங்கையிலுள்ள கல்வி நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டது போன்று அனைத்து வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண படவேண்டும் என்ற எந்தவிதமான அக் கறையோ கவலையோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இல்லை. அவரால் இந்தப் பிரச்சினைக்கு உறு தியான தீர்வு எதனையும் காணவும் முடியாது.

நாடாளுமன்றச் செயற்பாடுகள் தொடர்பான எனது ஐந்து மாத கால அனுபவத்தில், தமிழர் பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதியிடமும் அவரது அரசிடமும் எந்தவிதமான தீர்வுத் திட்டமும் இல்லை என்பதனை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஈ.பி.டி.பியின் முழு ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டே அவர் செய்மதி மூலம் யாழ்மக்களுக்கென மே தினத்தில் உரையாற்றியுள்ளார்.

எதிர்காலத்தில் நாடாளுமன்றத் தில் தமக்கு எதிராகக் கொண்டு வரப்படவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஈ.பி.டி.பி யினரைத் தனக்கு ஆதரவாக செயற படவைக்கும் நோக்கத்துக்காகவே அவர் இந்த உரையை நிகழ்த்தியுள் ளார்.

யாழ்.மாவட்டத்துக்குப் பெருந் தொகையான பணம் ஒதுக்கப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அது செலவிடப்பட விருப்பதாகத் தெரிவித்துள்ள ஜனாதி பதி, தீவுப் பகுதியிலே இந்தப் பணம் முழுவதும் செலவிடப்படுவதை அறி வாரா?

தமிழர்களுக்கு நிலையான தீர் வைப் பெற்றுக்கொடுக்க விடுதலைப் புலிகள் முன்வந்தால் ஈ.பி.டி.பியைக் கலைத்து விடுவோம் என்று அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளதாக அவர்களின் மேதினக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு ஈ.பி.டி.பி. செய்வதற்குத் தயாராக இருந்தால் இவர்களுக்கு முன்னதாகவே நான் எனது நாடாளு மன்ற உறுப்பினர் பதவியை இரா ஜினாமாச் செய்துவிட்டு அரசியலில் இருந்து ஒதுங்கத் தயாராக இருக் கின்றேன்.

ஈ.பி.டி.பியினருக்கு உண்மையாக அக்கறை இருக்குமானால் - அரசாங் கத்திடம் தங்களுக்கு இருக்கும் செல் வாக்கைப் பயன்படுத்தி - 'விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும், யுத்தத்தை நிறுத்த வேண்டும், தமிழர் மீதான பாதுகாப்புக் கெடுபிடிகள் நீக்கப்பட வேண்டும்' - என்ற கோரிக்கைகளை அரசாங்கத்தின் முன்வைத்து பத்து நாள்கள் காலக்கெடு வழங்கி, அழுத தம் கொடுப்பார்களா?

ஈ.பி.டி.பி. மேலும் மூன்று அமைச் சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு மக்களுக்கு சேவை செய்ய வேண் டும் என்று நான் இப்பொழுதும் கோரு கின்றேன்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் நடை பெறும் அனைத்து விழாக்களிலும் தன்னையே பிரதம விருந்தினராக அழைக்கவேண்டும் என்று அச்சுறுத்தி வரும் ஈபிடிபிவட்டுக்கோட்டை அமைப் பாளர் ந.திரிலோகநாதன், யாழ்.இந்து மைதானத்தில் நடைபெற்ற மேதின நிகழ்வில் ஐ.தே.கவை விமர்சித்துள் ளார்.

ஐ.தே.க. காலத்தில் - பிறேமதா ஸாவினால் தத்தெடுக்கப்பட்டு வளர்க் கப்பட்ட - விரல் விட்டு எண்ணக் கூடிய வாக்குகளைப் பெற்று நாடாளு மன்ற ஆசனங்களைப் பிடித்த - ஈ.பி.

தி.மகேஸ்வரன்

டி.பி. என்றும் ஐ.தே.கவுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

நன்றியை மறந்து, ஐ.தே.கவை தூற்றி வருகின்றார்கள் அவர்கள்; வளர்த்த கடாவே மார்பில் பாய்வது போல் நடந்து கொள்கிறார்கள்.

'தாமரைப்பூ' என்று கூறிவிட்டு கொழும்பிலிருந்து பெருமளவு வெற் றிலையை நான் கொண்டு வந்ததாக வும் தாமரைப்பூ கொண்டு வருவதற்கு ஈபிடிபியிடம் நான் அலைந்து கொண் டிருந்ததாகவும் திரிலோகநாதன் கூறி யுள்ளார். முடிந்தால் இது தொடர் பான ஆவணங்களைச் சமர்ப்பிக்கு மாறு நான் அவரைக் கேட்கிறேன்.

தீவுப்பகுதியில் இருந்து கடலட்டை, இறால் போன்றவற்றை கொழும்புக்கு அனுப்புவதற்கு உதவுமாறு விமான சேவை முகவராகச் செயற்பட்டு வந்த என்னிடம் வந்து ஈபிடிபியினர்தான் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஈபிடிபியின் ஒடிந்திரியம் 11 மோட்டார் சைக்கிள்கள் எனது நிறு வனமான மஹாலட்சுமி ஸ்டோரில் கடனாகப் பெறப்பட்டவை 5வரு டங்களாகியும் இந்த மோட்டார் சைக் கிள்கள் பெற்றுக்கொண்டதற்கான பணம் எதுவும் எமது நிறுவனத் துக்கு வழங்கப்படவில்லை. இந்த மோட்டார் சைக்கிள்களுக்குரிய 11 புத்தகங்களும் இன்னும் எங்களிடம் தான் இருக்கின்றன.

இந்தக்கணக்கில் 8 லட்சத்து 65 ஆயிரம் எனது நிறுவனத்துக்கு வரு மதியாகவுள்ளது.

ரீதரி தியேட்டரில் பொருத்தப் பட்டுள்ள - எம்மிடம் பெறப்பட்ட - சூளிரூட்டிகளின் கணக்கில் இன்னும் 65 ஆயிரம் ரூபா செலுத்தப்பட வேண்டும்.

மஹாலட்சுமி நிறுவனத்தின் பெய ரில் யாழ்ப்பாணம் - திருகோண மலை பயணிகள் கப்பல் சேவை நடத்துவதற்கு பிரயாணி ஒருவருக்கு 500 ரூபா வீதம் 'கமிஷன்' வழங் குமாறு ஈ.பி.டி.பியினர் கேட்டனர்.

இவ்வாறான நிலைமைகள் இருந்த போதும் நாம் அமைதியாகவே இருந்து செயற்படுகிறோம்.

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த வுடன் ரணில் விக்கிரமசிங்க தங்க ளுடன் கதைத்து அமைச்சுப் பொறுப் புகள் வழங்கப்போவதாகக் கூறிய தாக மாவை சேனாதிராசா தெரிவித் துள்ளார்.

ரணில் இப்படிக் கதைக்கவில்லை. சந்திரிகாதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சம்பந்தருக்கு இவ் வாறு வாக்குறுதிகளை வழங்கினர்.

சம்பந்தர் ஒரு நாடாளுமன்ற உறுப் பினராக இல்லாதபோதும் குண்டு துளைக்காத வாகனம் உட்பட சகல சலுகைகளையும் கொழும்பில் அனு பவித்து வருகிறார்.

குடாநாட்டு மக்கள் மீது பாரிய சுமைகள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தச் சுமைகள் பற்றி எதுவும் தெரியாதது போல் எமது நாடாளுமன்ற உறுப் பினர்கள் மௌனம் சாதிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக் கும் இடையில் ஒரு தடவை நடை பெறும் விமான சேவைக்கு (இரு வழி) லயன்எயர் நிறுவனத்துக்கு 2 லட்சம் ரூபா வாடகை வழங்கப் படுகிறது.

இந்த விமானத்தில் ஆயிரம் கிலோ பொருள்களும் 52 பயணிக ளும் ஏற்றப்படுகின்றனர். ஒரு வழிப் பயணத்தில்போது பொருள்களினால் 70 ஆயிரம் ரூபாவும் பயணிகளிடம் இருந்து 1லட்சத்து 30 ஆயிரம் ரூபாவும் பெறப்படுகின்றது.

இரு வழிப்பயணத்துக்கு 2 ஆயி ரத்து 300 ரூபா பெறவேண்டிய நேரத தில் பயணிகளிடமிருந்து ஆறாயிரம் ரூபா அறவிடப்படுகிறது.

இதனை நாடாளுமன்றத்தில் எமது தமிழ் உறுப்பினர்கள் எவரும் கட் டிக்காட்டவில்லை.

இதேவேளை இந்த விமானத்தில சடலம் ஒன்றை அனுப்புவதற்கு 15 ஆயிரம் ரூபா கட்டணம் அறவிடப்படு கின்றது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பா ணத்துக்கு அனுப்பப்படும் சடலத் துக்கு பாதுகாப்பு அமைச்சின் அனு மதி பெற்றபின் அதனைச் சோதனை செய்வதற்கு 4 ஆயிரம் ரூபா கட்ட ணம் செலுத்தப்படுவதுடன் அவர் கள் விரும்பிய மலர்ச்சாலையில் மட டுமே அந்தச் சடலத்தை வைக்க வேண்டும் என்று நிபந்தனையும் விதிக கப்படுகின்றது.

திருகோணமலைக்கும் யாழ்ப்பா ணத்துக்கும் இடையில் நடைபெறும் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப் பல் ஒரு தடவை இருபகுதிக்கும் இடையில் சேவையில் ஈடுபடுவதற்கு - இரு வழியிலுமாக - பொது மக்க விடமிருந்து மொத்தம் 13 லட்சம்

(14ஆம் பக்கம் பார்க்க)

வெளிவந்துவிட்டது!

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான

பொதுச் சாதாரணதரப் பரீட்சை வழிகாட்டி நூல்

(கடந்தகால வினாத்தாள் 2000 AUG, அண்மைக்கால பொது அறிவு விடயங்கள், வழிகாட்டி மற்றும் விடைக் குறிப்புகளுடன்)

ஆக்கியோர்:- கமலதாசன் & உமாசங்கர்

கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம், ஜீலங்கா, கப்பிரமணிய, துர்க்கா ஸ்ரோசனர்ஸ்

உட்பட சகல புத்தகசாலைகளிலும். (87390)

மரண அறிவித்தல்கள்

திருமதி நாகரத்தினம் செல்வப்பாக்கியம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும், 60, தலையாழி லேன், யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகரத்தினம் செல்வப்பாக்கியம் (02.05.2001) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (அஜந்தாஸ் ரெகஸ்ரைல்ஸ்), ராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரன் (லெபனான்), ரதி ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜயோகி, சிவகிருபராஜா, நிர்மலா, ராமசாமி (ராமு) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2001) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

60, சபாபதி லேன்,
தலையாழி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
(8412) நா.ரவீந்திரன் (மகன்)

வைரவப்பிள்ளை சரவணமுத்து (தேவன்)

மாவை ஊரைச் சேர்ந்த வைரவப்பிள்ளை சரவணமுத்து (தேவன்) (01.05.2001) செல்வாய்க்கிழமை ஹொலண்டில் காலமாகிவிட்டார்.

அன்னார் வைரவப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும், ரமேஸ், ராதிகா, றஜீவ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சடையர் ராசுவின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் நாகம்மாவின் மருமகனும், பவளம், இராசரத்தினம், சிவபாலசிங் கம், சந்திரசேகரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (ஹொலண்ட்) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்:
உரும்பிராய் இந்துக் கல்லூரி வீதி, உரும்பிராய். திரு.திருமதி சந்திரசேகரம் (சந்திரன்)
(C/16540)

திருமதி கிருஷ்ணன் அன்னம்

சத்திரங்கை, கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் அன்னம் நேற்று (03-05-2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ச.கிருஷ்ணனின் அன்பு மனைவியும் ரூபசௌ வந்தரி (கொழும்பு), றஞ்சிதமலர், இராஜேந்திரம் (பொறியியலாளர், லண் டன்), புவனேஸ்வரலிங்கம் (கனடா), பாஸ்கரதாஸ் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கவடிவேல்(ஆசிரியர்), நடேக (லண்டன்), ஜெயராணி (லண்டன்), பிறேமாவதி (கனடா) ஆகியோ ரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(05-05-2001) சனிக்கிழமை 12.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஊரிக்காடு மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சத்திரங்கை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

தகவல்:-
சீ.நடேசு
(87407) (மருமகன்)

இளங்கலைஞர் மன்றம்

வருடாந்த இசை விழா 2001

இன்று (04-05-2001) வெள்ளிக்கிழமை நிகழ்ச்சி

மாலை 3.30 - 4.30 மங்கள இசை

K.R.சுந்தரமூர்த்தி, S.தேவதாஸ் ~ நாதஸ்வரம்
S.ராமதாஸ், N.பிரசன்னா ~ தவில்

4.30 - 5.00 இசைக்கச்சேரி

M.ஜெயானந்தவதி ~ பாட்டு
K.பத்மநாதன் ~ வயலின்
S.துரைராசா ~ மிருதங்கம்

5.00 - 5.30 வயலினிசை -

பாமினி நாகரத்தினம் ~ வயலின்
V.ரமணன் ~ மிருதங்கம்
K.நந்தகுமார் ~ முக்கர்சிங்

5.30 - 6.30 இசைக்கச்சேரி

M.ஸ்ரீரங்கநாதன் ~ பாட்டு
K.பத்மநாதன் ~ வயலின்
S.துரைராசா ~ மிருதங்கம்
A.செல்வரத்தினம் ~ கடம்

கலைஞர்கள், ரசிகர்கள், ஆர்வலர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சட்டநாதர் வீதி, நல்லூர். (87414) மேற்படி மன்றத்தினர்.

பலஸ்தீன வன்முறைக்கு எதிராக ஷெரோன் கடும் நடவடிக்கை

ஜெருசாலேம் மே 4

பலஸ்தினர்களின் வன்முறைத் தீவிரவாதத்துக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள யூதக் குடியிருப்பு ஒன்றில் முதல் தடவையாக நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பலஸ்தீனர்கள் ஒருதலைபட்சமான இடைவெளி கூட இல்லாமல் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பத்திரிகைச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்கள்

உலக பத்திரிகைச் சுதந்திர தினத்தை ஒட்டிய மூன்று நாள் மாநாடு நேற்று நமிபியாவில் ஆரம்பமானது.

யுனெஸ்கோ பணிப்பாளர் நாயகம் கெஜிரோ ஸஜுரா மா நாட்டை தொடக்கி வைத்து உரையாற்றிய போது சில நாடுகளில் இன்னும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்கள் உள்ளன. சில ஜனநாயக நாடுகளில் முழுமையான பத்திரிகைச் சுதந்திரம் வழங்கப்படுவதில்லை என்று தெரிவித்தார். (ம)

யசீர் அரபாத் உதவி கோரி தென்னாபிரிக்கா செல்கிறார்

காஸா, மே 4

பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார். இஸ்ரேலுக்கும் பலஸ்தினத்துக்கும் இடையிலான மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு தென்னாபிரிக்காவின் உதவியை அரபாத் கோருவார்.

தனது விஜயத்தின் போது தென்னாபிரிக்க அதிபர் மற்றும் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா ஆகியோரை அரபாத் சந்தித்துப் பேச்சு நடத்த உள்ளார். (ம)

தீப் பிடித்த விமானத்திலிருந்து பாய்ந்தவர் நிலத்தில் மோதிப் பலி!

சென்னை அருகே கோரச் சம்பவம்!!

சென்னை, மே 4

சென்னையில் விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து உயிர் தப்புவதற்காக குதித்த விமானி, 'பரசூட்' செயற்படாததால் நிலத்தில் மோதி உயிரிழந்தார்.

சென்னையை அடுத்துள்ள வண்டலூர் மிருகக்காட்சிச் சாலையருகே இந்தக் கோரச் சம்பவம் நிகழ்ந்தது.

தாம்பரத்தில் உள்ள இந்திய விமானப் படைப் பயிற்சி மையத்தில் இருந்து கிளம்பிய இந்த விமானம், புறப்பட்ட சிறிது நேரத்திலேயே வானில் தீப் பிடித்து கீழ் நோக்கி விழத்தொடங்கியது.

விமானம் தீப் பிடித்ததும் பயிற்சியாளர் ஸ்குவாடன் லீடர் சஞ்சய்கவுர் பரசூட் மூலம் விமானத்திலிருந்து குதித்ததாகவும்—

'பரசூட்' சரியாகச் செயற்படாததால், அவர் தரையில் விழுந்து காயமடைந்து இறந்ததாகவும்—பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து விமானப்படை உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஒ)

விஷம் கலந்த தண்ணீர் அருந்தி 300மாணவர்கள் ஆஸ்பத்திரியில்

கம்போடியாவில் சம்பவம்

கம்போடியாவில் விஷம் கலந்த குடிதண்ணீரை அருந்திய 300 பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் விஷதால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விஷம் கலந்த குடிதண்ணீரை அருந்திய மாணவர்களும் ஆசிரியர்களும் தலைவலி மற்றும் மயக்கத்துக்கு உள்ளானதாகவும் —

உடனடியாக அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் — சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடிதண்ணீரில் எவ்வாறு விஷம் கலக்கப்பட்டது என்பது குறித்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. (ம)

வன்முறைகளுக்குக் காரணமான எஸ்ராடாவின் ஆதரவாளர்கள் அவசரகாலச்சட்டத்தின் கீழ்கைது

மணிலா, மே 4

பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபர்ஜோசப் எஸ்ராடாவை விடுதலை செய்யக்கோரிநடத்தப்பட்ட வன்முறைகளுக்குக் காரணமான அவரின் சகாக்களான சட்ட அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரை அரசு அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்துள்ளது.

அரசுக்கு எதிராக துரோகம் செய்யுமாறு மக்களைத் தூண்டியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை—

கடந்த ஒருவார காலமாக ஜோசப் எஸ்ராடாவை விடுதலை செய்யக்கோரி நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் பேரணிகளின் போது இடம் பெற்ற வன்முறைகளில் 4 பேர் உயிரிழந்தனர்; நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

இதனை அடுத்தே அரசு இத்தகைய தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வன்முறைகளுக்கு காரணமானமேலும்பலஎஸ்ராடா ஆதரவாளர்களைப் பொலீஸார் தேடிவருகின்றனர்.

வன்முறைகளையும் ஆர்ப்பாட்டங்களையும் கடுத்து நிறுத்தும் வகையில் நீதிமன்ற உத்தரவின் பேரில் ஜோசப் எஸ்ராடா தலைநகர் மணிலாவில் உள்ள சிறை ஒன்றில் இருந்து நகருக்கு வெளியே உள்ள சிறை ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம)

வறுமையை ஒழிக்கும் முயற்சியில் மூன்றாம் உலக நாடுகள் தோல்வி

உலகவங்கி அறிக்கையில் தெரிவிப்பு

வாஷிங்டன், மே 3

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்குள் வறுமையை முற்றாக அகற்றி விடும் முயற்சியில் மூன்றாம் உலக நாடுகள் பல தோற்றுவிடும் அச்சம் எழுந்துள்ளது.

உலக அபிவிருத்தி குறித்து உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தக் கவலை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வறுமையை அகற்றும் முயற்சியில் ஆபிரிக்க நாடுகளே அதிகம் தோல்விபடைத்திருப்பதாகவும் —

இழக்கு ஆசிய நாடுகள் வறுமை ஒழிப்பில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியிருப்பதாகவும்— அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகில் மொத்தம் உள்ள அறுநூறு கோடி மக்களில், சுமார் 120 கோடிப் பேரின் ஒருநாள் வருமானம் ஒரு டொலர் மதிப்புக்கும் குறைவாகவே இருப்பதாக உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

1990 இலிருந்து 1998 இற்குள் உலகில் வறுமையில் வாடுபவர்களின் எண்ணிக்கை 10 கோடியால் குறைந்துள்ள போதிலும், சர்வதேச அளவில் வறுமையை ஒழிக்கும் முயற்சியில் கடுமையாகப் போராடவேண்டியிருப்பதாகவும் உலக வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

தமிழக அரசியலில்...

"ஜெயலலிதாவிடம் முறையிடுவோம்"

அ.தி.மு.க. பிரமுகர்களுக்கு நடிகைகள் மிரட்டல்

நெல்லை, மே4

அ.தி.மு.கவுக்காகப் பிரச்சாரம் செய்யச் சென்ற நடிகைகள் அம்பிகா, ராதா ஆகியோர்மீது திருநெல்வேலி அ.தி.மு.க பிரமுகர்கள் சிக்கித் தவித்தனர்.

இது குறித்துக் கூறப்படுவதாவது—

திருநெல்வேலியில் பிரசாரம் செய்வதற்காகச் சென்ற அம்பிகாவும், ராதாவும், அங்கு நட்சத்திர விடுதியொன்றில் தங்கியிருந்தனர்.

அவர்களுடன் பேசச் சென்ற தென்காசி அ. தி. மு. க எம். பி. முருகோன் உட்பட முக்கிய பிரமுகர்களிடம் நடிகைகளின் தம்பியும் நடிகருமான ராமார்ஜுன் ஒரு நிகழ்ச்சிப் பட்டியலை காட்டினார்.

அதில் முக்கிய பல இடங்கள் விடுபட்டிருப்பதையும் குறுகிய நேரமே பிரசாரத்துக்கு ஒதுக்கப்பட்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டனர்.

இது குறித்து நடிகைகளிடம் கூற முயற்சித்தபோது எங்கள் விருப்பப்படிதான் பிரசாரம் செய்வோம் அதனை மாற்றினால் ஜெயலலிதாவிடம் முறையிடப்படும் என்று மிரட்டல் விடப்பட்டதாம்.

இதனையடுத்து, நடிகைகளின் பிரசாரத்துக்கு ஆசைப்பட்டதுக்கு தண்டனை இது, என்று புலம்பியபடி அ.தி.மு.க. பிரமுகர்கள் சென்றனராம்.

தமிழ்நாட்டுத் தேர்தலில் அனல் பறக்கும் பிரசாரங்கள்

சென்னை, மே 4

தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவுக்கு ஒரு வாரமே உள்ள நிலையில் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்துள்ளன.

அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த தவறுகள், ஊழல்கள் ஆகியவற்றைத் தி.மு.க. கூட்டணியினர் தமது பிரசாரத்தில் வாக்காளர்களுக்கு நினைவூட்டுவதைப் பிரதானமாகக் கொண்டுள்ளனர்.

அதே சமயம், அ.தி.மு.க. கூட்டணியினர் ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதை வாக்காளர்களிடம் உருக்கமாகத் தெரிவித்து அனுதாப அலையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மூன்றாவது அணியான ம.தி.மு.கவினரோ கருணாநிதியின் குடும்ப அரசியலையும், ஜெயலலிதா ஊழல் வழக்குகளில் தண்டனை பெற்றதையும் கூறி, நேர்மையான வைகோவுக்கு வாக்களிக்கக் கோருகின்றனர். (ஒ-9)

வாஜ்பாயின் கூட்டத்துக்கு ம.தி.மு.கவுக்கு அழைப்பில்லை

மாநில பா. ஜ. க. அறிவிப்பு

சென்னை, மே 4

தமிழகத்தில் பிரதமர் வாஜ்பாய் பங்கேற்கும் பிரசாரக் கூட்டத்துக்கு ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபால்சாமிக்கு அழைப்பு அனுப்பப் போவதில்லை என்று தமிழக பா. ஜ. க. தெரிவித்துள்ளது.

வரும் 7ஆம் திகதி முதல்வர் கருணாநிதியும், பிரதமர் வாஜ்பாயும் பங்கேற்கும் மாபெரும் பிரசாரக் கூட்டம், சென்னை மெரீனா கடற்கரையில் நடைபெற உள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் இடம் பெறும் இந்தக் கூட்டத்துக்கு, அந்தக் கூட்டணியின் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் ம. தி. மு. கவுக்கு அழைப்பு மறுக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் பா. ஜ. க. வேட்பாளர்களை எதிர்த்துத் தனது வேட்பாளர்களை ம.தி.மு. க. நிறுத்தாதது குறிப்பிடத்தக்கது. (ஒ)

தவறான தகவல் மூலம் இளைஞர் கைதாவது நிறுத்தப்படவேண்டும்

ஆணைக்குழு அதிகாரி வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 4

தவறான தகவல்களின் அடிப்படையில் இளைஞர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி என். ஜீவேஸ்வரா இவ்வாறு 512 ஆவது படையணியின் தளபதி கேணல் சந்தனரூப சிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ். நகரிலுள்ள 512வது படையணி அலுவலகத்தில் படையணியின் தளபதியைச் சந்தித்து உரையாடிய அவர் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்களையும் சுட்டிக் காட்டினார்

குடும்பப் பிரச்சினை மற்றும் தனிப்பட்ட பகைமைகள் காரணமாக ஒருவரை ஒருவர் பழிவாங்கும் நோக்குடன் 'புலிகளுடன் தொடர்பு உள்ளவர்', 'புலிகளுக்கு உதவி செய்பவர்'. என்று இளைஞர்கள் படையினருக்குக் காட்டிக் கொடுக்கப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் தேவையற்ற கைதுகள் இடம் பெறுகின்றன. இத்தகைய கைதுகள் நிறுத்தப்படவேண்டும்.

இவ்வாறு கைது செய்யப்படும் அப்பாவி இளைஞர்கள் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதனால் அவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படுகிறது.

கைதாவோர் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படும் போது தாக்கப்பட்டது பற்றி எவருக்கும் கூற வேண்டாமென்று படையினரால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இத்தகைய நிலைமையினால்தான் யாழ்ப்பாணம் ஒரு 'திறந்த வெளிச் சிறைச் சாலையாக' இருப்பதாப் பலராலும் சுட்டிக் காட்டப்படுகிறது — என்றும் ஜீவேஸ்வரா படைத் தளபதியிடம் தெரிவித்தார். (ஐ-5)

சந்நிதியான் ஆச்சிரமத்தில்

சந்நிதியான் ஆச்சிரமசைவ, கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும் வாராந்த வெள்ளிநிகழ்வில்— இவ்வார நிகழ்வாக "மானிட வேள்வி" என்னும் விடயம் பற்றி இன்று சிவஸ்ரீ கை. நமசிவாயக் குருக்கள் சொற்பொழிவு ஆற்றுவார். ஆழிழவுரையை க. வெக் கொழுந்து நிகழ்த்துவார். (க)

கருத்தரங்குகள்

வலிகாமம் கல்விவலயபாட சாலைகளில் சைவ நெறிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலக் கருத்தரங்கும், செயலமர்வும் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் நடைபெறவுள்ளன.

சங்கானை சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை சித்தன்கேணி கணேச வித்தியாலயத்திலும்—

உடுவில் தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை காலை 8 30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் கருத்தரங்கு நடைபெறும்.

சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர் நடேசன் சிவசண்முகமூர்த்தி இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளார். (க-152)

மலசலகூடம் அமைப்பதற்கு மானியம் பெற விண்ணப்பித்த 35 பேருக்கு காசோலைகள்

தென்மராட்சி, மே 4

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மலசல கூடம் அமைப்பதற்கான மானியத்துக்கு விண்ணப்பித்து இதுவரை அதற்கான கொடுப்பனவுக் காசோலையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் —

உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு பணிமனைப் பொறுப்பதிகாரி து. கிளிண்டஸ் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளாதவர்களின் காசோலைகள் யாழ். சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

பா. தருமவதி — மட்டுவில் தெற்கு. கு. சின்னத்துரை — சரசாலை வடக்கு, க. சண்முகலிங்கம் — கல்லடி மூட்டு ஒழுங்கை, சாவகச்சேரி. நா. நாகேஸ்வரன் — தவசிகுளம், மிருசுவில், சி. வேலுப்பிள்ளை — எழுதுமட்டுவாழ் தெற்கு, கு. இந்திராணி — எழுதுமட்டுவாழ் தெற்கு, சி. சிவசம்பு — எழுதுமட்டுவாழ் தெற்கு.

தி. சந்திரதேவி — நாவற்குழி மேற்கு, செ. மோட்சலிங்கம் — மட்டுவில் தெற்கு.

து. தனபாலசிங்கம்— கைதடி வடக்கு, க. சிவபாலசிங்கம்— தர்மக்கேணி பளை, இ. சந்திரசேகரம் — அல்லாரை தெற்கு, சி. கந்தசாமி— விடத்தற்பளை, வெ. இராசரத்தினம்—கரம்பகம்—

த. பாலசுப்பிரமணியம்— கல்வயல், சி. சுப்பிரமணியம்—சந்திரபுரம், சி. இரத்தினம் — சங்கத்தானை, தி. இராஜெஸ்வரி — நுணாவில் மேற்கு, க. சின்னத்துரை— விடத்தற்பளை. செ. கந்தையா— கைதடி மேற்கு, இ. ஆனந்தராணி — கைதடி மத்தி—

க. சுப்பிரமணியம்—கைதடி மத்தி, பொ. தெய்வநாயகி— கைதடி வடக்கு, அ. பார்த்திபன் — வெள்ளாம் போக்கட்டி, க. நாகரத்தினம்— உசன் மிருசுவில், சி. இராசேந்திரம்—மீசாலை வடக்கு. டி. தவராசா— பளை நகரம், த. நாகேஸ்வரி — மட்டுவில் தெற்கு—

ச. யோகநாதன் — கல்வயல், பொ. சக்திவர்ணன் — மீசாலை வடக்கு, சு. ஜெகதீஸன்— வேம்பிராய், வே. பாலசுந்தரம் — மீசாலை கிழக்கு, பெ. மஞ்சுளா— மீசாலை மேற்கு, வி. சாவித்திரி—மீசாலை மேற்கு. இ. இராசதுரை— கைதடி மத்தி. (க-117)

பரந்தன் ஊழியர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 4

பரந்தன் இரசாயனக் கொம்பனி லிமிட்டெற் ஊழியர்களின் சம்பளவிடயமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இன்று காலை 9 மணிக்கு கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊழியர்கள் அனைவரையும் காலை 8.30 மணிக்கு முன்னர் யாழ் பஸ் நிலையத்திற்கு முன்னால் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

எழுவைதீவு மீனவர்களுக்கு கடனுதவி

ஊர்காவற்றுறை, மே 4

எழுவைதீவு பிரதேசத்தில் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கென எழுவைதீவு கடற்றொழிலாளர்சங்கத்தினால் தலா 7,500 ரூபா சுழற்சிமுறை, கடன் வழங்கப்பட்டு வருகிறது

இதற்கென யு. என் எச். சி. ஆர். நிறுவனத்தால் எழுவைதீவு கடற்றொழிலாளர் சங்கத்திற்கு மூன்றரை இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 64 பேருக்கு இத்தச் சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்களிடம் மாதாந்தம் 400 ரூபா வீதம் அறவீடு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-16)

செயலமர்வு

புதிதாக நியமனம் பெற்ற வலிகாமம் கல்வி வலய விஞ்ஞான ஆசிரியர்கள் மற்றும் மேலதிக விளக்கம் பெற விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கணிப்பீடு சம்பந்தமான ஆசிரியர் செயலமர்வு ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் நிலையத்தில் நடைபெற உள்ளது. (க-152)

அரசினர் பொதுவைத்தியசாலை
யாழ்ப்பாணம்

குளிருட்டி பொருத்துவதற்கான கேள்வி அறிவித்தல்

சமீபத்தில் இவ் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட பிரித்தானிய அரசின் நன்கொடையான குளிருட்டியைப் பொருத்தி அதை இயங்க வைப்பதற்கான கேள்விகள் தகுதிவாய்ந்தோரிடம் இருந்து கோரப்படுகின்றன. குளிருட்டியின் மொடல் (FSX 145 - 2:1587 கேள்விகள் 19-05-01 காலை 10.30மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். குளிருட்டியைப் பணிப் பாளரிடம் தொடர்பு கொண்டு காரியாலய நேரத்தில் பார்வையிட முடியும். கேள்வி விண்ணப்பங்கள் முத்திரையிடப்பட்ட கவரில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

வைத்திய கலாநிதி
செல்வி நவமலர் கனகரட்ணம்,
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/16536)

வலி. கிழக்குப் பிரதேச சபையால்
நடத்தப்படும்

விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் - 2001

இடம்:- நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானம்.

காலம்:- 06-05-2001 ஞாயிறு பி. ப. 2 மணி

தலைவர்:- திரு. பூ. குணசிங்கம்(ஜே.பி.யு.எம்)
(தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை)

பிரதம விருந்தினர்:- திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

சிறப்பு விருந்தினர்கள்:-

1. திரு. க. மணியல்லவராஜன்
(தலைவர், நல்லூர்ப் பிரதேச சபை)
2. திரு க. கேதீஸ்வரன்
(பிரதேச செயலர், கோப்பாய்)
3. திரு. சி. வி. கிருஷ்ணசாமி
(பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)
4. திரு. ஐ. சிறிறங்கேஸ்வரன்
(தலைவர், பருத்தித்துறை பிரதேச சபை)
5. திரு. ஏ. டபிள்யூ. அரியநாயகம்
(தலைவர், நெடுந்தீவு பிரதேச சபை)
6. திரு. என். திரிலோகநாதன்
(தலைவர், வலி. மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்)

கௌரவ விருந்தினர்கள்:-

1. திரு. சோ. விகுவலிங்கம்
(அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி)
2. திருமதி ஏ ஏப். ஜே. ரூபசிங்கம்
(மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)

குறிப்பு:- நடைபெற்று முடிந்த சைக்கிளோட்டம், மரதனோட்டப் போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டுக் குழு,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

(சி/16528)

அறிவித்தல்
விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அடுத்த அரையாண்டுக்குரிய விஞ்ஞானபீட விரிவுரைகளும், செயன்முறை வகுப்புக்களும் 2001-05-09 (புதன்கிழமை) ஆரம்பமாகும்.

பதிவாளர்
(சி/16535)

ரகு போட்டோ டெக்னிக்

மேற்படி ஸ்தாபனம் இன்று 04—05—2001 முதல் மீண்டும் வழமை போல் இயங்கும் என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம்.

மூக்குக் கண்ணாடி, கமரா ஆகியன திருத்திக் கொடுக்கப்படும்.

ரகு போட்டோ டெக்னிக்
391, கஸ்தூரியார் வீதி,
(மேல்மாடி, கன்னாதிட்டி சந்திக்கு அருகில்)
(87372) யாழ்ப்பாணம்.

முருகன் நகை மாளிகை
சாவகச்சேரி

பல வருடகாலமாக சாவகச்சேரியில் இயங்கி வந்த முருகன் நகை மாளிகை இன்று [04-05-2001] வெள்ளிக்கிழமை தொடக்கம் கொடிகாமம் வீதி, நெல்லியடியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதனை அன்பர்கள், நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

கிளை ஸ்தாபனம்:
275, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:
கொடிகாமம் வீதி,
நெல்லியடி (87378)

உதயன்

புதிய அசுரனுக்கு எதிரான போர்!

யாழ்ப்பாணத்தின் புதிய பிரச்சினையாக - மிகப் பெரும் பிரச்சினைகளில் ஒன்றாக - உருவெடுத்திருக்கிறது பாதீனியம் களை. குடாநாட்டின் பல பகுதிகளிலும் அது மிகத் தீவிரமாக அசுர வேகத்தில் பரவி வருகிறது. நாளாந்தம் இது குறித்துப் பத்திரிகையில் செய்திகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

இந்தப் பயங்கரக் களையின் மூலம் இந்தியாதான். இந்திய இராணுவம் இங்கு நிலை கொண்டிருந்த எண்பதுகளின் பிற்பகுதியில், தூருப்புக்களுக்கு உணவுக்காகக் கொண்டு வரப்பட்ட கால்நடைகள் மூலம் குடாநாட்டின் ஒரு சில பகுதிகளில் பாதீனியம் வேரூன்றியது.

நாளடைவில் அது பல்கிப் பெருகிப் பரவியது. இப்போது மிகவும் ஆபத்தான கட்டத்தை உருவாக்கும் அளவுக்கு மிகப் பயங்கரமாகப் பரவி உள்ளது. பாதீனிய அசுரத்தின் ஆபத்து இல்லாத பிரதேசம்; பகுதி இல்லை என்ற அளவுக்கு குடாநாட்டின் விவசாயத்தை மட்டுமன்றிச் சூழலையும் எச்சரித்துக் கொண்டிருக்கிறது.

பாதீனியம் எங்கள் பிரதேசத்தின் மண் வளத்தை நாசமாக்குவதோடு மட்டுமன்றி, விவசாயத்திற்கும் பெரும் குந்தகமாகவும் சவாலாகவும் மட்டுமன்றி மக்களின் சுக நலத்தையும்- தேகாரோக்கியத்தையும் - பல வகைகளிலும் பாதிக்கும் கொடிய செடியாகும்.

பாதீனியம் குடாநாட்டில் வேகமாகப் பரவி வருவது குறித்து சுமார் ஒன்றரை, இரண்டு வருடங்களுக்கு முன்னரே உதயனின் வார இதழ் சஞ்சீவியில் தாவரவியல் நிபுணர் கா.குகதாசன் மிக விளக்கமாகவும் விரிவாகவும் கட்டுரைகள் எழுதி இருந்தார். பல தடவைகள் அவர் எழுதிய கட்டுரைகளில் பாதீனியம் பரவுவதை தடுக்காவிடில் குடாநாட்டுக்கு ஏற்படக் கூடிய விவசாய, பொருளாதார பாதிப்புக்களை விலாவாரியாக எடுத்துக் காட்டியிருந்தார்.

அவ்வேளையிலேயே இதனைத் தடுப்பதற்கு உரிய அக்கறை எடுக்கப்பட்டு, உகந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் இன்றைய ஆபத்துச் சூழ்ந்திருக்காது. பாதீனியம் ஒழிப்பை எமது மாவட்டத்தை, பரதேசத்தைக் காக்கும் ஓர் அவசர திட்டமாக செயற்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் தவறிவிட்டார்கள் என்பதே இப்போதுள்ள குற்றச்சாட்டாகும். போதிய நிதி ஒதுக்கீடும் அரச மட்ட ஆதரவும் இதற்கு இல்லை என்று அதிகாரிகள் காரணம் கூறலாம். ஆனால் பாதிக்கப்பட்ட தரப்பு உரிய உந்துதலும் அடிமேல் அடிஅடித்து ஆய்க்கினை கொடுத்து கடும் முயற்சி எடுத்துச் செய்திருக்க வேண்டிய பணி இது.

பாதீனியம் வெறும் விவசாயக் களையாக இருப்பினும் கூட அதனால் விவசாயிகளுக்கும் அவர்களுடாக பொதுமக்களுக்கும் பல பக்கப் பாதக விளைவுகளைத் தரவல்லது அது. எமது சுற்றுப் புறச் சூழலை நாசமாக்கி மக்களுக்கு நோய்களை உண்டாக்கக் கூடிய ஆபத்து உண்டு என்பதும் தெளிவுபடுத்தப்பட்ட ஒன்று.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் இத்தகைய மேலதிக பாதிப்பின் தாக்கம் அதிகளவில் உணரப்படும். பாதீனியம் ஊடுருவலுக்கு எதிராக, குடா நாடளாவிய ரீதியில் போர்க்காலப் பிரகடனம் செய்து செயலாற்ற வேண்டிய தேவை இப்போது எழுந்துள்ளது. அசுரத்தன மிக்க பாதீனியத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட வேண்டும். பாதீனிய ஆபத்து தற்காலிகமானது அல்ல. உரிய முறையில் தடுக்கப்படாவிடில் இனி வரும் சந்ததிகளை கடுமையாகப் பாதிக்கும்.

எனவே பாதீனிய ஒழிப்பில் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பயன் தரா. அந்தக் கட்டம் தாண்டி விட்டது. விவசாயிகள் மட்டுமன்றி முழுச் சமூகம் இந்தப் போரில் ஈடுபட வேண்டும். தங்களது சூழலை பாதீனிய அரக்கன் இல்லாத பகுதியாக்க வேண்டும் என்ற உணர்வு குடாநாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் பீறக்க வேண்டும். அந்த உணர்வு செயலாக மாற வேண்டும்.

ஆள் பற்றாக்குறை காரணமாக

காப்புறுதி அலுவலகம் சேவையை முழுமையாக வழங்கமுடியாத நிலை

யாழ்ப்பாணம்,மே4

இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் 16 ஊழியர்களுக்கான வெற்றிடம் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருப்பதால் அலுவலகக் கருமங்களை நிறைவேற்றுவதில் காலதாமதத்தையும் சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

- இவ்வாறு காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் யாழ்.பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

ஏனைய பிரதேசங்களில் இயங்கும் பிராந்திய அலுவலகங்களுக்கு கணனிகளும் ஏனைய உபகரணங்களும் போதிய அளவில் வழங்கப் பட்டுள்ளன. எமது அலுவலகத்துக்கு இதுவரை ஒரு கணனி கூட வழங்கப்படவில்லை.

40 பேர் பணியாற்ற வேண்டிய இடத்தில் 24 பேர் மட்டுமே நிய மிக்கப்பட்டுள்ளனர். இதனால் ஊழியர்களின் வேலைப்பளுவும் அதிகம். அத்துடன் கணனி மயமாக்கப்பட்டுள்ள அலுவலகங்களுடன் போட்டியிட்டு பணியாற்ற வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எழுதுவினைஞர்கள் 8 பேர்க்கான வெற்றிடங்கள் நீண்டகால மாகவே நீடித்து வருகின்றன. அத்துடன் தட்டெழுத்தாளர்கள் மூவருக்கும் சிற்றூழியர்கள் இருவருக்கும் வரவேற்பாளர், காசாளர், நிறை வேற்று உத்தியோகத்தர் போன்றோருக்கும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அந்த அதிகாரி கூறினார்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்டி காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சேவையை பொதுமக்களுக்கு முழுமையாக வழங்க ஒத்துழைப்புத்தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

கன்னாகம் றோட்டரக்ட் கழகத்தின் அலுவலகம் உடுவில்-மானிப்பாய் வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. உடுவில் மத்தி கிராமசேவையாளர் எஸ். ஆர். ஜேசுபாலன் குத்துவிளக்கேற்றி அலுவலகத்தை திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம். றோட்டரக்ட் கழகத் தலைவர் அ.செல்வேந்திரதாஸ், பொருளாளர் ம.ஜெயக்குமார், செயலாளர் வி.ப.சசிவர்ணன் உட்பட கழக அங்கத்தினர்களும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: வலிதெற்கு செய்தியாளர்)*

நீதிமன்றில் ஆஜராகுமாறு எம்.பிக்கு உத்தரவு

கொழும்பு,மே4

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல ஒகஸ்ட் 20ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்று கண்டி பிரதம மஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார். கடந்த திங்களன்று இவருக்கெதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

கடந்த தேர்தலின் போது கண்டி பிரதிப் பொலீஸ் மா அதிபரின் அலுவலகத்தின் முன்னால் சட்டத்துக்கு மாறான முறையில் ஒன்றுகூடி குழப்பம் விளைவித்ததாக இவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. (க)

சிகிச்சை பெற உதவிடுவீர்!

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் வேண்டுகோள்

திருமதி மேரி கலிஸ்ரா உதயதாசன் கிளாலியைச் சேர்ந்தவர். இடம்பெயர்ந்து தற்போது வடமராட்சியில் முதலாம் கட்டை, பருத்தித்துறையில் வசிக்கின்றார். 30 வயதான இவருக்கு 06 வயதுடைய குழந்தை ஒன்று உண்டு. கணவர் நிரந்தரமான தொழில் அற்றவர். அரசினால் வழங்கப்படும் நிவாரணத்தையே இக்குடும்பம் பெரிதும் நம்பி உள்ளது.

இவரது வலது கால் எலும்பில் கட்டி (Born Tumour) ஏற்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையிலும் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் மூன்று தடவைகள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் குணமடையவில்லை. அதற்கான முறையான சிகிச்சையை இந்தியாவில் பெற வேண்டும் என யாழ். போதனா வைத்தியசாலையில் இவருக்கு சிகிச்சை அளித்த சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சீ. அம்பலவாணர் சிபார்சு செய்துள்ளார். இந்தியாவில் உடனே சிகிச்சையை மேற்கொள்ளாது போனால் வலது காலை இழக்க வேண்டி ஏற்படும்.

இச்சிகிச்சைக்கு இந்திய பணத்தில் ஏறக்குறைய 2 லட்சம் ரூபா தேவைப்படும்.

வடமராட்சி லயன்ஸ் கழகம் அவரது பெயரில் *பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் 10448 இலக்க சேமிப்பு கணக்கொன்றை* ஆரம்பித்து ஒருதொகைப் பணத்தையும் வைப்பில் இட்டுள்ளது. 'சிறுதுளி பெருவெள்ளம்' கருணை உள்ளம் படைத்தவர்கள் மேற்படி கணக்குக்கு தம்மால் இயன்ற பணத்தை அனுப்பி ஒரு சோகக் கண்ணீரைத் துடைப்பதற்கு உடன் உதவும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

கருணை உள்ளம் படைத்த குடாநாட்டு மக்கள் இந்த மனிதாபிமானம் மிக்க வேண்டுகோளுக்குச் செவிமடுத்து பேருதவி புரிவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

உயிருக்கு உறுதியான சாஸ்திரங்களை அருளிய உமாபதி சிவாச்சாரியார்

சிதம்பரத்திலே கொற்றவன் குடியிலே பிறந்தவர் உமாபதி சிவாச்சாரியார். சந்தான குரவரில் ஒருவரான இவர் தில்லைவாழ் அந்தண் மரபில் வந்தவர். சைவசித்தாந்த சாத்திரங்களாகிய மெய்கண்ட சாத்திரங்களில் பதினான்கு நூல்கள் உள்ளன. அவற்றில் உமாபதி சிவாச்சாரியாரின் "சித்தாந்த அட்டகம்" தனித்துவமானவை. சித்தாந்த அட்டகம் எட்டு நூல்களைக் கொண்டுள்ளது.

மெய்கண்டதேவர் இயற்றிய "சிவஞானபோதம்" முதல் நூலாகக் கொள்வோம். அருணந்தி சிவாச்சாரியாரின் "சிவஞானசித்தியார்" வழி நூலாகக் கொள்வோம். உமாபதி சிவாச்சாரியாரின் "சிவப்பிரகாசம்" சார்பு நூல் எனக் கொள்ளப்படும்.

குறுக்கதிர்

சித்தாந்த அட்டகம் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு மாம்.

இவற்றைவிட கோயிற்புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிக் கோவை போன்ற நூல்களையும் சைவ உலகுக்குத் தந்துள்ளார்.

உமாபதி சிவாச்சாரியார் குருபூசைத் தினம் நாளை சனிக்கிழமையாகும்.

மேலும் பௌட்காகமத்துக்கு வடமொழியிலே ஒரு சிறப்பான வியாக்கியானம் செய்துள்ளார். "சிவப்பிரகாசத்துக்கு" கொழும்புப் பெரியார் திரு.மு.திருவிளக்கம் சிறந்த உரை எழுதியுள்ளார். சிவப்பிரகாசம் விரிவான நூல். திருவருட்பயன் சிறிதாகக் கருதிலும் பத்து அதிகாரங்களைக் கொண்டு திருவருள் பெருமையைக் கூறி நிற்கின்றது. இதற்கு சைவப் பெரியார் கு.சிவபாதசுந்தரம் சிறந்த உரை எழுதியுள்ளார். அவ்வுரைக்குச் சமமாக முன்னும் பின்னும் உரைகள் வெளிவந்ததாக இல்லை. சங்கற்ப நிராகரணம் அகச்சமயம் ஒழிந்த எல்லாம் புறச்சமயமே என்கின்றது.

உமாபதிச் சிவாச்சாரியார் சிதம்பர நடராஜப் பெருமானைத் தரிசனம் செய்து திரும்புகையில் சிவிகை, தீவர்த்தி முதலிய விருதுகளோடு சென்ற போது திருபெண்ணாடகம் மறைஞானசம்பந்த சுவாமிகள் "பட்ட கட்டையிற் பகற் குருடன் போகின்றான் பாருங்கள்" என்று குறித்துக் கூறினார். இது கேட்ட நாயனார் சிவிகை விட்டு இறங்கி மறைஞான சம்பந்தரை வணங்கினார். அவர் வழி நின்றார். தமது குருவாகக் கொண்டார்.

இவர் சிதம்பரத்திலே மார்கழி மாத திருவிழாவிலே ஏறாது நின்ற கொடியை கொடிக்கவி பாடி ஏற்றியவர். "சிதம்பர மான்மியம்" என்னும் கோயிற் புராணத்தை சிதம்பரத்தில் அரங்கேற்றியவர். இவருடைய மாணாக்கர் திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்த நமசிவாயதேசிகர் என்பது குறிப்பிடத்தக்கது. கொற்றவன் குடியில் இவரின் திருக்கோயில் உண்டு. இவருடைய காலம் 600 ஆண்டுகளுக்கு முன் என்பர். சித்திரை மாதத்து அத்த நட்சத்திரம் இவருடைய குருபூசைத் தினமாகும்.

உயிர்க்கு உறுதுணையான சாஸ்திரங்களைத் தந்த உமாபதி சிவாச்சாரியார் திருவருளைச் சிந்திப்போமாக.

- கா.சிவபாலன்.

நாளை

சித்திரை 22
சனிக்கிழமை
திதி: திரியோதசி
முன்னிரவு 10.29 வரை.
நட்சத்திரம்: அத்தம்
பிற்பகல் 3.12 வரை.
சனிப் பிரதோஷ விரதம்
சுபநேரம் : 2.56 - 4.26
ராகுகாலம் : 08.56 - 10.26
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பை விடத் தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதன்தான் சமூகத்தில் முன்னேற முடியும்.

நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,மே4

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரின் 180ஆவது ஜனன தினமும் நினைவுப் பேருரையும் இன்று பிற்பகல் 1மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் ஞாபகார்த்த நூல்நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

(க-4)

ஆலயம் சேதம்

தென்மராட்சி,மே4

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு உசன் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் உசன் கந்தசுவாமி ஆலய கட்டடத்தில் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆலய வளவுக்குள் நின்ற வேப்ப மரத்தில் மோதி ஷெல் வெடித்த தால் மரக்கிளைகள் முறிந்ததுடன் ஆலயத்தின் கட்டடத்திலும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

கண்ணிவெடிகள் காத்திருக்கின்றன, கவனம்!



வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் பதவிக்கான ஆள்சேர்ப்பு - 2001

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையில் வெற்றிடமாகவுள்ள உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு கீழே குறிப்பிட்ட தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 25.05.2001 ஆகும்.

02. ஆள்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:

1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெறுபவர்கள் விதவைகள், அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும்.
2. இது ஓர் இடமாற்றச் சேவையாகும். இந்நியமனம் பெறுபவர்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

03. சம்பள அளவுத்திட்டம்

பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (III) இற்கு அமைவாக
ரூபா: 97,500 15X2,700 - 1,38,000/- (1-5-1-2) ஆகும்.

குறிப்பு:- உத்தியோகத்தருக்கு சம்பந்தப்பட்ட துறையில் பட்டத்துக்கு மேலதிகமாக வேறு தொழில் தகைமைகள் இருப்பின் அவரைப் பொருத்தமான சம்பளப் படிநிலையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

04. தகைமைகள்

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ஆ. அவர் சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
இ. விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
(ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)
ஈ. விண்ணப்பதாரி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் உள்ள 6 ஆண்டு காலப் பகுதியில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகளிலாயினும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.

குறிப்பு:- வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாக அல்லது நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருந்த போதிலும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களிலே தற்காலிகமாக வதிவோரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் எனினும் அவர்கள் தமது தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடம் எனக் காண்பித்து வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. அவ்வாறு எனில் அதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும், நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

உ. கல்வித்தகைமைகள்:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இலத்திறனியல் பொறியியல் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு:- இவ்விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் மேற்குறிப்பிட்ட பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

05. ஆட்சேர்ப்பு முறை:

அங்கீகரிக்கப்பட்ட ஆள்சேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்.

06. விண்ணப்பிக்கும் முறை:

மேலே முதலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கு அமைவாக 'ஏ' 4 அளவிலான (21 செ.மீ. x 29 செ.மீ.) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் *2001-05-25 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ* "செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, மக்கெஞ்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையில் உயிரியல் வைத்தியப் பொறியியலாளர் பதவிக்கான ஆள்சேர்ப்பு - 2001' என்று குறிப்பிடல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

திருமதி ...,
செயலாளர்
மாகாணப் பொதுச் சேவை ஆணைக் குழு,
வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவையின் உயிரியல் வைத்தியப் பொறியியலாளர்கள் பதவிக்கான ஆள்சேர்ப்பு - 2001

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் வண./திரு./திருமதி/செல்வி
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :
02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :
03. தபால்முகவரி
தமிழில் :
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :
04. பால்: ஆண்: M/பெண்: F
05. இனம்:
சிங்களவர் - 1. இந்தியத்தமிழர் - 4
இலங்கைத்தமிழர் - 2 ஏனையவர்கள் - /
முஸ்லிம் - 3
06. நீங்கள் இலங்கைப்பிரஜையா?
07. அ) பிறந்த திகதி: வருடம்: மாதம்:. திக
ஆ) 2001-5-25 ம் திகதியன்று வயது வருடங்கள் மாத நாள்கள்
08. (1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம் :
(2) பிரதேச செயலாளர் பிரிவு
(3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை
(4) வடக்கு - கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருப்பின் தங்கள் நிரந்தர வதிவு மாவட்டம்:
(5) தற்காலிகமாக இடம்பெயர்ந்து வதியும் மாவட்டம் மாகாணம்:
இடம்பெயர்ந்த ஆண்டு: மாதம்: திகதி:
09. கல்வித்தகைமைகளும் ஏனைய தகைமைகளும்
9.1 (i) பெற்றுள்ள பட்டப் பாடநெறியின் பெயர்:-
(ii) சான்றிதழை வழங்கிய நிறுவனத்தின் பெயர்:
(iii) சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி
9.2 வேறு தகைமைகள் இருப்பின் அது பற்றிய விவரம்
9.3 சேவை அனுபவம் இருப்பின் அதுபற்றிய விவரம்
10. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் இவ் ஆள்சேர்ப்பு விதிகளுக்கு அமைந்து ஒழுகி நடப்பதற்கும் சம்மதிக்கிறேன் என்று உறுதி கூறுகிறேன். மேலும் இவ் ஆள்சேர்ப்பு நிபந்தனைகளின் படி நான் தகுதியற்றவனாகக் கண்டு பிடிக்கப்பட்டால் நேர்முகப் பரீட்சையின் முன்னரோ நேர்முகப் பரீட்சையின் போதோ அல்லது நேர்முகப் பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

....
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

11. விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு, படை தாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவிகளிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160/- விற்கு மேற்பட்ட சம்பளத்தையுடைய அரச சேவையின் நிரந்தர பதவி வகிக்கும் உத்தி யோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
இவ்விண்ணப்பதாரி வண./திரு/திருமதி/செல்வி .....
என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும் .....ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தமது கையொப்பம் இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .....
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரின் முழுப்பெயர்
பதவி:
முகவரி (பதவி முத்திரை)
(வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்துக்கு இடம்பெயர்ந்துள்ளவர்கட்கு)

மேற்படி விண்ணப்பதாரி வடக்கு-கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக/வதிவிடமாக கொண்டவர் என்பதையும் அவர்..... திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ..... மாவட்டத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .....
பிரதேச செயலாளர்/கிராம சேவகர்
கையொப்பம்

பதவி
முகவரி
(பதவி முத்திரை)

தினைக்களத் தலைவரின் உறுதியுரை
இத்தினைக்களத்தின் தற்காலிக/நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் வண./திரு/திருமதி/செல்வி..... அவர்களின் விண்ணப்பத்தை சீபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படும் இடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகல வேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி..... .....
தினைக்களத் தலைவரின்
கையொப்பமும் பெயரும்

பதவி
முகவரி
(பதவி முத்திரை)

(C/16132)

புலம்பெயர்ந்து வருவோரை கண்டு மிரளும் அமெரிக்கர்கள்

அண்மையில் அமெரிக்க சஞ்சிகையான 'நியூஸ் வீக்'கில் வெளிவந்துள்ள கட்டுரை ஒன்று அகதி அந்தஸ்தும் சுக போகங்களும் தேடி வேற்று நாடுகளை நோக்கிப் படையெடுக்கும் பலருக்கும் தலைவலியைத் தரக்கூடும். தூர நோக்கில் - நீண்ட கால அடிப்படையில் - சிந்திப்பவர்கள் அங்கு கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் கவனத்தில் எடுக்காமல் இருக்க இயலாது.

எப்பாடுபட்டாவது வெளிநாடு ஒன்றிற்கு போய்விடல வேண்டும அல்லது பிள்ளையை விமானம் ஏற்றிவிடல் வேண்டும் என்றெல்லாம் சிந்திக்கும் சுபாவம் எம்மவரிடையே வளர்ந்து வரும் இக்கால கட்டத்தில், பலராலும் இப்படியான கட்டுரைகளை வாசித்துக் கிரகித்துக்கொள்ள சக்தி இருப்பதும் இல்லை. சந்தர்ப்பம் கிட்டுவதும் இல்லை.

மேற்குலக நாடுகள் கறுப்பர்களை வேற்றுக் கண்கொண்டு பார்ப்பதற்கு நிறம் மட்டும் காரணமாக அமைவதில்லை. எமது கலாசாரமும் பழக்க வழக்கங்களும் ஏழ்மையும் அவர்களுக்கு ஒவ்வாத தன்மையே பெரும் பிரச்சினையாக உருவாகி வருகின்றது. போகும் இடங்களில் எல்லாம் எம்மவர்கள் அளவு கணக்கின்றி சுதந்திரத்தை அனுபவிப்பது போல இருப்பது ஒரு வெறும் பிரமையே. தாய் நாட்டில் திருமணம் என்றால் மணமகனின் அந்தஸ்து பற்றி அதிகம் சிரத்தை காட்டும் பெற்றோர் பிள்ளையை வெளிநாடு ஒன்றிற்கு அனுப்புவதனால் மட்டும் பிளேட்வேரிங் என்ஜினியரோடு திருப்திப்பட்டுக் கொள்கிறார்களே.

கறுப்பர்களின் படையெடுப்பு

அங்கெல்லாம் நீறு பூத்த நெருப்பாக - படையெடுத்து வரும் வேற்று நாட்டவர்கள் மீதான புகைச்சல் இருப்பது பற்றி நாங்கள் ஏன் கவலைப் படுகிறோம் இல்லை என்பதுதான் கேள்வி. செல்வந்த மேற்குலக நாடுகள் தமது செல்வத்தைச் சுரண்டவே கறுப்பர்கள் படையெடுத்து வருகின்றனர் என்றுதான் நினைக்கின்றன. அகதிகளை அரவணைக்க அங்குள்ள சட்டங்கள் பூரண சுதந்திரத்தை வழங்கி வந்தாலும் அங்கு வாழும் வெள்ளையர்களின் மனங்களில் எதிர்காலம் பற்றிய அச்சம் எழுவதைத் தடுக்க இயலவில்லை.

மேற்கு நாடுகளில் வளர்ந்து வரும் கறுப்பினத் துவேசம்

இந்தப் படையெடுப்பு பெரிய தலைவலியாகவே அந்த நாடுகளில் இயலபாக வாழ்ந்தவர்களுக்குப்படுகின்றது. முந்தி வந்தவர்கள் பிந்தி வருபவர்களை எதிர்க்கும் தன்மை என்றும் இதனைச் சொல்லலாம். அமெரிக்காவின் வரலாறு இதற்குச் சான்று பகரும். அங்கு இயல்பாக வாழ்ந்த செவவிந்தியக் குடிகளை அழித்தும் துரத்தியும்தான் வெள்ளையர்கள் ஆதிக்கத்தைத் தமதாக்கிக் கொண்டனர். அவ்வாறு முந்தி விட்ட வெள்ளையர்கள் பிந்திக் குடி புக நினைக்கும் கறுப்பர்களின் தொகையினைக் கண்டு கலங்குகிறார்கள்.

அம்பிகா

ஜனநாயக சுதந்திரம் உள்ள ஒரு நாட்டில் கறுப்பர்களின் கை ஓங்குவது வெள்ளையர்களின் நலன்களைப் பாதிக்கத்தான் செய்யும். சனத்தொகைப் பெருக்கமும் வெள்ளையர்களை விட கறுப்பர்களிலேயே அதிகம் என்பது அடுத்து அவர்களுக்கு கவலை தரும் விடயம் ஆகின்றது. தொடரும் அந்நியரின் படையெடுப்பை இன்முகம் கொண்டு வரவேற்க அமெரிக்க மற்றும் ஐரோப்பிய மக்கள் தயாரில்லை. இதை அனுமதிப்பது கருணை காட்டுவதாக இருக்காது. தலை போகிற விடயம் இது என அங்குள்ள பல கடுங் கோட்பாட்டாளர்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

குறிப்பிட்ட 'நியூஸ் வீக்' சஞ்சிகை வெளியிடும் புள்ளி விவரங்கள் சும்மா இருப்பவர்களையும் சிந்திக்கத் தூண்டி விடுகின்றன. அவ்வப்போது பல அமெரிக்கப் பத்திரிகைகள் இக்குடியேற்றம் பற்றி வெளியிட்ட தகவல்களின் தொகுப்பும் அங்கே பிரசுரமாகி இருக்கின்றது. அமெரிக்கர்கள் பேணுகின்ற கல்வித் தரத்தை குடியேறி வரும் கறுப்பர்கள் பேணாததால் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது நாட்டின் அறிவு நிலை வீழ்ச்சி கண்டு விடும் என்பது ஒரு பத்திரிகையின் கவலை. அதுவும் கல்வியில் ஆர்வமே காட்டாத வேற்று நாட்டுப் பெண்கள் அமெரிக்காவின் பாரம்பரியமான புள்ளி விவரங்களைத் தலைகீழ் ஆக்கி விடுகின்றார்களாம்.

ஏழு வீதத்திற்கும் குறைவான வெள்ளையினப் பெண்களே டிப்ளோமா என்ற தகுதியைப் பெறாமல் கல்வியை இடை நிறுத்தம் செய்யும் நிலையில், இங்கிருந்து பறப்பவர்கள் ஏழு பேராவது டிப்ளோமாவிற்காக முயற்சிக்கிறார்களா என்பதே கேள்வி. புகுந்த வீட்டில் அந்த இடத்திற்கு ஏற்ற தகுதியைப் பேணத் தவறினால் எம்மை அவர்கள் மதிக்க வேண்டும் என்று எவ்வாறு எதிர்பார்க்கலாம்?

பிரதேச இறைமை குறித்த அச்சம்

அடுத்த தலைவலியாக அவர்களுக்கு இருப்பது என்னவென்றால் - இங்கிருந்து செல்பவர்கள் கூட்டங் கூட்டமாக குடியிருப்பதால் சில பிரதேசங்களின் இறைமை இவர்களின் கைக்கு வந்து விடுமோ என்ற அச்சம்தான். சில இடங்களில் 44 வீதம் வரையான ஒரே இன அந்நியர்கள் குடி இருப்பதைக் கண்டு அங்குள்ளவர்கள் அஞ்சுவதாக 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்து இருக்கின்றது. இந்த விகிதம் 50 ஐத் தாண்டும் போது அந்தப் பிரதேசங்களில் அமெரிக்கர்களின் ஆதிக்கம் அடிபட்டுப் போய்விடும்.

அமெரிக்கப் பாடசாலைச் சிறுவர்களில் 20 விகிதத்தை இந்தப் புலம் பெயர்ந்து வந்தவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார் கள் என்கின்ற செய்தியும் அமெரிக்கர்களின் வயிற்றில் புளியைக் கரைக்கவே செய்கின்றது.

அந்தந்த நாடுகளின் விஞ்ஞான தொழில்நுட்ப வளங்களிற்கு ஏற்ப அல்லாது தாழ்ந்த தரத்தில் வாழ்க்கையை நடத்தவும் தொழில்களைச் செய்யவும் அவர்களது சூழலை மாசுபடுத்தவும் இடையில் புகுபவர்கள் முனைகிறார்கள் என்பது அடுத்த குற்றச்சாட்டு ஆகின்றது. குறைந்த வருமானத்தோடு திருப்திப்படவும், ஏழ்மையை அரவணைத்து வாழவும், எந்தத் தொழிலையும் எப்படியும் செய்து பிழைக்கவும் தயாராகி உள்ளே புகுபவர்கள் அங்குள்ளவர்களின் தொழில் வாய்ப்புக்களையும் ஊதிய உயர்வு மற்றும் வாழ்க்கைத் தரத்திற்கான வாய்ப்புக்களையும் விழுங்கி ஏப்பம் விட்டு விடுகிறார் கள்.

இனத்துவேசம்

பீற்றர் சலின்ஸ் என்ற அமெரிக்க எழுத்தாளர் தமது புத்தகம் ஒன்றில், அங்கு வரும் வெளிநாட்டவர்களுக்கான பல விதி முறைகளைக் குறிப்பிட்டு இருக்கின்றார். இத்தகைய நடைமுறைகளையே எமது நாட்டில் இனத்துவேசம் என்கின்றோம். குடியேற வருபவர்கள் ஆங்கிலத்தையே தேசிய மொழியாக ஏற்க வேண்டும், தமது வாழ்க்கை முறையில் அமெரிக்கர் என்ற முத்திரையைப் பதிக்க வேண்டும், கடும் உழைப்பும் திறமையும் அவர்களது மூலதனமாக இருக்க வேண்டும், நிவாரணங்களையும் பதிவு செய்யப்படாத தொழில்களையும் நம்பிய சீவியம் தேவையில்லை என்றெல்லாம் சாடிக் கொண்டே போகின்றார்.

போகிற போக்கைப் பார்த்தால் என்னதான் கோயில் கட்டவும், விழாக்கள் வைக்கவும், கொண்டாட்டங்களை சிறப்பாகச் செய்யவும் அங்கே சுதந்திரம் கிடைத்தாலும் நிலைமைகள் காலப் போக்கில் இங்குள்ளவற்றை விட மோசம் அடையலாம் என்பதே உண்மை. பல நாடுகள் இதற்கிடையில் தமது குடி வரவு தொடர்பான சட்டங்களை இறுக்கி வருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் இப்போது கறுப்பர்களுக்கான வரவேற்பு வெகுவாகக் குறைந்து விட்டது. எதிர்ப்பு இயக்கங்கள் செயற்படத் தொடங்கி உள்ளன. நகரப் பகுதிகளை விட்டு கிராமியச் சூழலுக்குள் பாதுகாப்பாகச் செல்ல இயலுவதில்லை. கறுப்பர்களைக் கடத்தி கொலை செய்து பழி வாங்கும் சம்பவங்கள் தலை தூக்கத் தொடங்கி உள்ளன.

அமெரிக்காவில் கறுப்பர்கள் ஆரவாரம்.

. எனவே மேற்குலக மினுக்கங்களை நோக்கி படையெடுக்க நினைப்பவர்கள் அந்த மாயையில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள நினைப்பதே உசிதமானது. அங்கே போய் ஒரு காரோ சொந்த வீடோ இல்லாமல் வாழுவது - இங்கு ஒரு ஒழுக்குக் குடிசையும், ஓட்டைச் சைக்கிளும் இல்லாமல் வாழும் நிலைமையை விடக் கேவலமானது. என்னதான் அடக்குமுறைகளும் எதிர்ப்புகளும், சட்டங்களும் இருந்தாலும் எங்கள் ஊர் வேப்பமரத்து நிழல் வாழ்க்கை சொர்க்கம்தான். இதை இருக்கின்ற போதே அனுபவிக்கத் தெரியாமல் அக்கரைப் பச்சைக்கு ஆசைப்பட்டு ஏஜென்ஸிகளுக்கு அலையும் அலைச்சல் தரும் சுகம் வெறும் போலியானது. அகதியாக என்றாலும் அடுத்த கிராமத்தில் வாழுகின்ற சுகம் அமெரிக்க மண்ணிலும் கிடைக்காது என்ற முடிவை நாங்களும் எடுத்து விட்டால் அங்கெல்லாம் எழும் எதிர்ப்பு உணர்வுகள் எம்மை ஒன்றும் செய்துவிடாது. உற்றார் உறவுகள் சூழ இயற்கையோடு இணைந்த ஆரவாரமற்ற நிம்மதியான வாழ்க்கை இங்கே கிடைப்பது போல உலகினில் வேறெங்கும் கிடையாது என்கின்ற உண்மை பட்டுப் பழுத்தவர்களுக்கு மட்டும்தான் விளங்கும்.

முன்னேறப் போகின்றோம் என்று சொல்லிக் கொண்டு குளிக்கப்போய் சேறு பூசிக் கொள்ளவும் சந்ததிகளை கலாசார பண்பாட்டுப் போர்வைகளின்றும் பறிகொடுக்கவும் அவர்களுக்கு கறுப்பர்கள் என்ற பட்டம் சூட்டவும் மட்டுமே அந்நிய நாட்டு மோகம் வழி வகுக்கும். ★

மிகத் தொன்மையான இந்து ஆலயம் உடுவில் பகுதியில் கண்டுபிடிப்பு!

உடுவில் மல்வம் பகுதியிலுள்ள ஸ்ரீ கந்தசாமி ஞான வைரவர் ஆலயத்தின் வரலாற்று ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் காலத்துக்கு முற்பட்டதெனக் கருதப்படும் இந்த ஆலயத்தின் தொன்மை பற்றி ஆராய்வதற்கு யாழ்பல்கலைக் கழக வரலாற்றுத்துறையினரும் இந்து நாகரீகத் துறையினரும் முயன்று வருகின்றனர். 1750ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தைக் கொண்டதாக கருதப்படும் இவ்வாலயம் இரண்டு மூலஸ்தானங்களைக் கொண்டுள்ளது. நீண்டகாலம் கவனிப்பாரற்று சேதமடைந்திருந்த இவ்வாலயத்தைப் புனரமைத்து இரண்டு மூலஸ்தானங்களையும் இணைத்து ஒரே கோயிலாக்க நிர்வாக சபையினர் தீர்மானித்து அதற்கான ஆரம்ப முயற்சிகளில் ஈடுபட்டிருந்த வேளையில் யாழ்பல்கலைக் கழகத் துறையினர், கோவில் பரம்பரைப் பூசகரின் தூண்டுதலின் பேரில் இக்கோவிலின் வரலாற்று உண்மைகளைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்துள்ளனர்.

ஆலயத்தில் 1856இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் சான்றாக விளங்கும் கல்தூண்.

இக்கோயில், வரலாற்றுப் பழமை மிக்கது என்பதனை அண்மையில் இக்கோவிலுக்கு விஜயம் செய்த யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர் செ.கிருஷ்ணராஜா, இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் கலா நிதி ப.கோபாலகிருஷ்ணஐயர் அடங்கிய குழுவினர் தெரிவித்தனர்.

மிக மிகத் தொன்மை வாய்ந்த விக்கிரகங்களும் மூர்த்தங்களும் இங்கு காணப்படுவதைக் கண்டறிந்துள்ளனர்.

இக்கோயிலின் மூலப்பிரகார மூர்த்தி உட்பட பரிவார மூர்த்தத்துள் ஒன்றான விநாயகர் சிற்பம் வெண்கலத்தால் ஆக்கப்பட்ட எழுந்தருளியான வள்ளி - தெய்வானை சமேத சுப்பிரமணியர் சிற்பங்கள் மற்றும் மகா மண்டபத்திலே வைத்து பூசிக்கப்படும் தியான நிலையில் உள்ள விஷ்ணுவில் சிவலிங்க தியானத்தைக் காட்டும் சிற்பம் என்பன தொன்மை வாய்ந்த யாழ்.இந்து விக்கிரகவியல் கலைமரபை வெளிப்படுத்துவனவாக உள்ளதை குழுவினர் ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

இக்கோயிலில் காணப்படும் கல்லில் பொறிக்கப்பட்ட வாசகம் ஒன்று இக்கோயிலின் கும்பாபிஷேகம் இறுதியாக 1856ஆம் ஆண்டு தை மாதம் மக நட்சத்திரத்தில் நடைபெற்றதாகக் குறிப்பிடுகிறது.

ஒல்லாந்தர் காலத்தில் பதியப்பட்ட தோம்பில் இக்கோயில் 1750ஆம் ஆண்டில் முதன்முதலாக பதியப்பட்டிருப்பதையும் காண்கிறோம். இவ்வாலயத்தின் பின்னணியை நோக்கும் போது திட்டவட்டமாக அது ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் காலத்துக்கு முற்பட்டது என்பதும் தெளிவாகின்றது. கோயிலின் இடிபாடுகள், மாடகோயில் அமைப்பு முறை போன்றன அதன் தொன்மையை நிரூபிக்கின்றன.

சிவபூசையில் ஈடுபட்டுள்ள விஷ்ணுவின் சயனநிலை யாழ்குடாநாட்டில் வேறு இடங்களில் காணப்படவில்லை. இதே மாதிரியான சிற்பப் பாணியை ஒத்த சிற்பம் ஒன்று தென்னிந்திய கேரள மாநிலத்தில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள சிற்ப பிரதிமைகள் இரு பிரிவுகளைக் கொண்ட கலை வடிவங்களை வெளிப்படுத்துகின்றன. விநாயகர் சிற்பம் தனித்துவமான சிற்பக்கலை அமைதியுடன் கூடிய அலங்கார நிலைகளை காட்டுகின்றது. இவை ஓரளவு சோழ - பாண்டிய கலைமரபினைத் தழுவியவையாக கருதப்படுகின்றன. விநாயகருடைய உத்தர பந்தமும், மூஷிகவாகன

உடுவில் ஆலயத்தில் உள்ள உத்தர பந்தத்துடன் கூடிய விநாயகர் சிலை

அமைப்புமே சோழ - பாண்டிய கலைப் பாணியை உறுதி செய்வனவாக அமைகின்றன.

இங்கு காணப்படும் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியரது சிற்ப அமைப்பு தனித்துவமான விக்கிரகவியல் கூறுகளைக் கொண்டுள்ளன. நிற்கும் நிலையில் காணப்படும் இம்மூன்று வெண்கலச் சிற்பங்களும் காண்ட மகுட அமைப்பைக் கொண்டவை. அம்மகுடங்களுக்கு பிற்பக்கத்தில் சிரசக்கரங்களை உடையதாகக் காணப்படுவதும், கமல பீடங்கள் மீது அவை உருவாக்கப்பட்டிருப்பதுமே பாண்டிய - விஜயநகர பாணியை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

சுப்பிரமணியர் சிற்பம் நான்கு திருக்கரங்களுடன் பின் வலது, இடது கரங்கள் முறையே வேலாயுதம், சூலாயுதம் தாங்கியவையாகவும், முன் வலது - இடது கரங்கள் முறையே வரதகஸ்தத்தினையும் அபய கஸ்தத்தினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இத்திருக் கரங்கள் நான்கும் தோள்மூட்டுப் பாகத்தில் இருந்து பிரிந்து வருவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

வி. பரிபூரணானந்த சர்மா

தேவயானை - வள்ளிநாயகி உருவங்கள் நாயக்கர் காலத்தின் தொடக்கத்தை பிரதிபலிக்கின்றன. வள்ளியினது ஆடை அலங்காரத்தில் உள்ள பீதாம்பரம், விஜயநகர நாயக்கர் கலைப்பாணியைக் கொண்டுள்ளன. சுப்பிரமணியரின் காதணியாக மகர குண்டலங்களும், தேவயானையின் காதாபரணமாக நாகாபரணங்களும் வள்ளிநாயகியின் கழுத்தாபரணமாக குண்டலங்களும் காணப்படுகின்றன. இவற்றின் இடுப்பாபரணங்கள் சிறந்த அலங்காரக் கூறுகளைக் கொண்டுள்ளன.

எனவே தனித்துவமாக இது வரை காலமும் ஆய்வாளர்களது நோக்கிற்கு புலப்படாதிருந்த இவ் வெண்கல விக்கிரகங்கள் பற்றிய சிறப்பு ஆய்வுகளையும் அவற்றின் முக்கியத் துவத்தையும் எதிர்காலத்

(8ஆம் பக்கம் பார்க்க)

தலதா மாளிகை குண்டுவெடிப்பு தொடர்பாக கைதா

10 மாதங்கள் காவலில் இருந்த மட்டக்களப்பு வாசி விடுதலை

அடிப்படை உரிமை மீறல் மனுவை அடுத்து

கொழும்பு,மே4

தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுக் கடந்த 10 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு வாசி எஸ்தியாகராஜா நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் கண்டி நீதிவானின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் இவர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

தன்னைத் தடுத்து வைப்பது சட்ட விரோதமானது என்று தெரிவித்து அவர் உயர்நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு மீதான விசாரணை உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முடிவுற்றது.

குண்டுத் தாக்குதல் தொடர்பாக இந்த சந்தேகநபருக்கு எதுவும் தொடர்பு இல்லை என்றும் -

எனவே அவரை விடுதலை செய்வதில் தமக்கு ஆட்சேபனை எதுவுமில்லை என்றும் -

அரசு தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்ததை அடுத்து நீதியரசர்கள் இவரை விடுதலை செய்தனர். (உ-7)

21ஆம் நூற்றாண்டின் புதிய களைநாசினி

'ரச்டவுன்'

வயல்களிலும் தரிசு நிலங்களிலும்
கோரை, அறுகு, இலுக்கு, மாணா, பாதீனியம் (இந்தியப் புல்) போன்ற களைகளினால் பிரச்சினையா?

இதோ இருக்கின்றது ஒரே தடவையில் முற்றாக அழிக்க

சி.ஐ.சி.யின் அதிவிசேட தயாரிப்பான ரச்டவுன் (களை நாசனி)

மற்ற எந்தக் களைநாசனியிலும் இல்லாத சிறப்புத் தன்மை

- இதில் கிளைபோசேற்றுடன் றைமேசியம் என்ற இரசாயனம் கலந்து இருப்பதனால் களைகளின் வேர்களை, கிழங்குகளைச் சிறந்த முறையில் ஊடுருவித் தாக்கி முற்றாக அழிக்கின்றது.
- களைநாசனி தெளித்து 8-10 நாள்களுக்குள் எல்லா இனக் களைகளையும் கட்டுப்படுத்தும் தன்மை.
- தெளித்து 6 மணித்தியாலத்துக்குப் பிறகு மழையினால் பாதிப்படையாது.
- ரச்டவுன் மண்ணில் பட்டதும் அதன் தாக்கத்தை இழப்பதால் பயிர் செய்யும் மண்ணுக்கு ஒருவித பாதிப்பும் இல்லை.

200 மி.லீ. (8 அ.வு) ரச்டவுன களை நாசனியை 16 லீட்டர் (3 1/2 கலன்) நீரில் கலக்கவும்.

CIC கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
199, கியூ ரோட், கொழும்பு - 02.

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்கள்:-

பவானி களஞ்சியம்
இராசவீதி, நீர்வேலி. T.P.- 021-2371, 2372

(2178)

கிருமிநாசனிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும்.

பிறப்புச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை

தென்மராட்சி,மே4

தென்மராட்சிப் பிரதேசத்தில் இது வரை தமது பிறப்புத் தொடர்பாகப் பதிவு செய்யாது பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்க பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இதுவரை பிறப்புப் பதிவினை மேற்கொள்ளாத பிள்ளைகளின் பெற்றோர் அது தொடர்பான விவரங்களை இணுவிலில் இயங்கும் பிரதேச செயலகத்திலும், நெல்லியடியில் இயங்கும் பிரதேச செயலக உப அலுவலகத்திலும், பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (மு-117)

ஆரம்பக்கல்வி வாண்மை விருத்திச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணத்திலுள்ள பிராந்திய ஆங்கில ஆதார நிலையத்தினால் ஆரம்பக்கல்வி வாண்மை விருத்திச் செயற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுவர்கள் மொழிக்கற்கை, பேச்சு மொழி, கேட்கும் ஆற்றல், சொற்களஞ்சிய அறிமுகம், அழப்படை வாசிப்பு, அடிப்படை எழுத்தறிவு, பாடல்கள், குறும்பாடல்கள், பாட ஆயுத்தம், வகுப்பறை மொழிப்பிரயோகம் ஆகிய தலைப்புக்களை உள்ளடக்கிய 93 செயலமர்வுகள் இதுவரை நடத்தப் பட்டுள்ளன.

யாழ்மாவட்டத்திலுள்ள 5 வலயங் களையும் சேர்ந்த 3ஆயிரத்து 157 ஆசிரியர்கள் இந்தச் செயலமர்வுகளில் பங்குபற்றியுள்ளனர். (மு-5-10)

மிகத் தொல்மை....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஆராயவேண்டிய ஒரு தேவை உருவாகி உள்ளது.

இப்புராதன வைரவ கோயிலில் உள்ள வைர கருங்கற் சிற்பமும் இதேபோன்று ஆராயப்படவேண்டிய தொன்று. கருவறையில் காணப்படும் இக்கருங்கல் சிற்பம் நான்கு கரங்களுடனும் தலையில் விரிந்த சுடர் போன்று காணப்படும் நீச்சுவாலையை ஒத்த தலை அலங்காரத்தையும், நாய் வாகனத்தை கொண்டுள்ளமையும் சிறப்பு ஆய்வுக்குட்படுத்த வேண்டியுள்ளது.

பொதுவான நோக்கில் உடுவில் மல்வம் ஸ்ரீ சுப்பிரமணிய ஞான வைரவர் தேவஸ்தானம் இரண்டு மூலஸ்தானங்களுடன் அமைந்த ஒரு புராதன இந்து ஆலயம் என்பது தெளிவு.

இக்கோயில் இடிபாடுகளுடாக இக்கோயில் பற்றிய புராதன பண்பாட்டு சான்றுகள் கிடைக்கப் பெறும் வரை இக்கோயில் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்ல யாழ்பல் கலைக்கழக வரலாற்றுத் துறையினரும் இந்து நாகரிகத் துறையினரும் பணியாற்ற முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. ★

அரசைக் கவிழ்க்க உதவுமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

இடது சாரிகளுக்கும் ஜே.வி.பிக்கும் அழைப்பு

கொழும்பு,மே4

பொ.ம.ஐ.முன்னணி அரசைக் கவிழ்த்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை வீட்டுக்கு அனுப்பும் பணியில் தன்னுடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற ஐ.தே.கவின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

இந்த நாட்டில் கொழுந்து விட்டெரியும் எந்தவொரு பிரச்சினைக்கும் ஜனாதிபதி குமாரதுங்காவின் அரசு தீர்வுகாண முடியாமல் திணறுகின்றது. நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமானால் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டியது அவசியம் - என்றார். (ம)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

உள்ளம் மகிழ	உள்ளம் நெகிழ
23 - 06 - 1980	21 - 03 - 2001

செல்வன் செல்வரட்ணம் சுதர்சன்

ஊட்டி வளர்த்த அன்னையையும் போற்றி வளர்த்த தந்தையையும் மறந்து செல்ல மனந்தான் வந்ததுவோ?
உன் பயண தாமதத்தால் எம் பாசத்தினையும் மறந்தீரோ?
நீ சிரித்துப் பேசிய வார்த்தைகள் எம் இதயத்தை அதிர்வைக்கின்றன!
உன் முடிய விழிகளைப்பார்த்து எம் விழிகளில் இரத்தம் கசிகிறது
உன்னைத்தேடி அலைகின்றோம்
ஒடிவந்திடு - நிம்மதியைத்தந்திடு!

கொழும்பில் எமது குலவிளக்கு அணைந்த செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியும் பூதவுடலை எடுத்துவரச் சகல விதத்திலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (04.05.2001) வெள்ளிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் ஏங்கும்
பெற்றோர் - உடன்பிறப்புக்கள்,
பேரன் - பேர்த்தி,
மாமன் -மாமி,
மச்சான் - மச்சாள்,
உறவினர் - நண்பர்கள்.

விக்னேஸ்வரா வீதி,
நிற்சாமம்,
சங்கானை. (87277)

நெஞ்சை விட்டகலாத
முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
குணரத்தினம் பொன்னம்மா

பாசத்தின் சுமையோடு கணப்பொழுதில் மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே!
உங்களை நினைத்து விழிகளில் சிந்தும் நீர் ஆறாகப் பாயுதம்மா! மாதங்கள் பன்னிரண்டு ஆனாலும் எங்கள் நெஞ்சை விட்டு மாறாதம்மா உங்கள் திருமுகம்!

தகவல்:
கு.நவரத்தினராசா,
தற்காலிக முகவரி:
குளப்பிட்டிச் சந்தி,
கொக்குவில். (87296)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
மாவிட்டபுரம் கிழக்கு,
தெல்லிப்பழை.

கணிப்பொறி Computer 2000 கலையார்வன்

தமிழில் ஒரு செயல்முறை விளக்கத் தொகுப்பு

Importance
Hard Ware
Windows 2000
Computer Virus

Programs
Microsoft Word 2000
Microsoft Excel 2000
Microsoft Power Point 2000
Macros
Microsoft Access 2000

நூல் வெளியீடு

மே 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி
யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி

தலைமை: திரு. ஆறுமுகம் இராஜகோபால்.
உதவிக் கல்விப் பணிப்பாளர் / யாழ்.கோட்டக் கல்வி அதிகாரி

வெளியீட்டுரை:
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
கணிப்புரை: Dr.F.X.ஜெயசேகரம் அடிகள்.
சிறப்புரை: நா.வரதராசா
பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.வலயம்

நூலில் விளக்கப்பட்டுள்ள சில செயன்முறை விளக்கங்கள் செய்து காட்டுநர்:
நூலாசிரியர் கலையார்வன்

முதற்பிரதி பெறுநர்:S.அன்ரனிதாசன்
பிரதேச முகாமையாளர், ஸ்ரீலங்கா டெலிகொம் லிமிட்டட்

ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு முன்னதாகவே
உங்களுக்குத் தேவையான
பிரதிகளைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

மண்டபத்தில் விசேட அறிமுக விலை 500/=

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7 அங்கங்கள் கொண்ட தொகுதிகள்,
560 பக்கங்கள், 400 விளக்கப்படங்கள்,
அழகிய வர்ண அட்டை Form Binding.

சுயமாகக் கற்று நீங்களும் நிபுணராகலாம்.

வெளியீடு:
V.J. கொன்ஸ்ரன்ரைன்/இயக்குநர்
NEO CULTURAL COUNCIL
28/1, சென்.ஜேம்ஸ் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம். - 021/3224
(C/16505)

இந்தியாவில் இருந்து வந்த

இரு நாச்சிக்குடா வாசிகள் காங்கேசன் தடுப்பு முகாமில்

யாழ்ப்பாணம்,மே4

இந்தியாவில் இருந்து நாச்சிக்குடாவுக்கு வந்த இருவர் தற்போது காங்கேசன்துறை தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் தெரிவித்தார்.

இல.39, கடற்கரைவீதி, முழங்காவில், நாச்சிக்குடாவைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை கிரிஸ்ரியன் பிரான்[illegible]ல் (வயது 36) மற்றும் அந்தோனிப்பிள்ளை தேவதாஸ் குறாஸ் ஆகிய இருவருமே தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் ஆவர்.

இவர்கள் இருவரும் கடந்த வருடம் நாச்சிக்குடாவில் இருந்து இரு படகுகளில் அகதிகளை ஏற்றிச் சென்ற சமயம் இந்தியாவில் சுங்கத்துறை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் -

தாங்கள் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து நாச்சிக்குடாவுக்குத் தப்பிசெல்வதற்காக "குல்லா" ஒன்றில் குடாநாட்டை நோக்கிப் புறப்பட்டதாகவும் -

மூன்று தினங்களாகக் கடலில் உணவு இன்றித் தத்தளித்து ஒருவாறு நெடுந்தீவு கரையை வந்தடைந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நெடுந்தீவு கிராம சேவகரிடம் தமது நிலைமையை எடுத்துக்கூறிய போது அவர் தம்மை அந்தப்பகுதி ஈ.பி.டி.பி. பொறுப்பாளரிடம் அழைத்துச் சென்று ஒப்படைத்ததாகவும் -

ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ஊர்காவற்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்ததாகவும் -

அவர்களே தம்மைக் காங்கேசன் துறைத் தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தன்னிடம் அந்த இருவரும் தெரிவித்ததாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் கூறினார்.

(க-6-4)

இந்துசமயப் பேரவையின் முன்னாள் உபதலைவரும், முன்னாள் உடுவில் பிரதேச செயலருமான ஆ.மகாலிங்கத்தின் ஞாபகார்த்தக் கட்டுரை மலர் அண்மையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நூலை வெளியிட்டு வைப்பதையும். வி.எஸ்.பி. வர்த்தக நிறுவனப் பிரதிநிதி எஸ்.ஜெகதீசன் நூலைப் பெற்றுக் கொள்வதையும் முதற் படத்தில் காணலாம்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுவதை அடுத்த படத்தில் காணலாம். இந்துசமயப்பேரவைத் தலைவர் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர், நல்லை ஆதீன முதல்வர், நூலாசிரியர் பேராசிரியர் நா.ஞானக்குமரன் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ஐ)

சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் வெசாக் போயா நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

'புத்த பகவானின் போதனையின் சாரம்' என்னும் தலைப்பில் பேராசிரியர் என்.ஞானக்குமரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

பஜனை, பண்ணிசை, காயத்திரி ஜெபம் ஆகிய நிகழ்ச்சிகளும் இறுதியில் நாராயண சேவையும் இடம் பெறும்.

(ஐ)

சேமிப்புத் தொகையை மீளப் பெறுவதற்கு

ஊழியர் சேமலாபநிதி விண்ணப்பங்களை யாழ். அலுவலகத்திற்கே அனுப்பலாம்

உரிய படிவத்தையும் இங்கேயே பெறமுடியும்

யாழ்ப்பாணம்,மே4

ஊழியர் சேமலாப நிதியைப் (ஈ.பி.எவ்.) பெறத் தகுதியுடைய யாழ்ப்பாணத்திலுள்ள ஊழியர்கள் இதற்கான விண்ணப்பங்களை யாழ். நகரிலுள்ள உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைகாலமும் இந்த நிதியைப் பெறுவதற்கான விண்ணப்பம் கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தின் தலைமையலுவலகத்திற்கே அனுப்பப்பட்டு வந்தது.

இதனால் யாழ்ப்பாணத்திலுள்ளவர்கள் இந்த நிதியைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதுடன், இங்கிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களில் தவறுகள் ஏதாவது ஏற்பட்டிருந்தால் திருப்பி அனுப்பப்பட்டு வந்தன.

இந்தக் காரணங்களை அடுத்து ஊழியர் சேமலாப நிதியைப் பெறுவதற்கான விண்ணப்பங்களை யாழ்ப்பாணத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேமிப்புத் தொகையைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் 'கே' விண்ணப்பப்படிவத்தை நகரிலுள்ள தொழில அலுவலகத்தில் பெற்று அதனை ஆங்கிலத்தில் பூரணப்படுத்தி தேவையான ஆவணங்களுடன் இந்த அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த விண்ணப்பப்படிவங்கள் உரிய முறையில் சரிபார்க்கப்பட்டு கொடுப்பனவுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

உரிய முறையில் பூரணப்படுத்தாததும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்களும ஏற்கப்படமாட்டா என்று தொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இதுதொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் வீரசிங்கம் மண்டபக் கட்டடத்தில் இயங்கி வரும் மாவட்டத் தொழில் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

(க-5-4)

மாவனெல்ல கலவரங்களை அடுத்து

இன உறவுகளைச் சீரழிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி உத்தரவு!

அவசரகாலப் பிரமாணங்களை அமுல்படுத்த அரசு பணிப்பு

கொழும்பு,மே4

சமூகங்களுக்கிடையிலான உறவுகளைச் சிதைக்கும் எந்த நடவடிக்கைக்கும் எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மாவனெல்லவில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற சம்பவங்களையடுத்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பாதுகாப்புப் பிரிவில் உயர் அதிகாரிகளுடன் விசேட கூட்டம் ஒன்றை நடத்தினார். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இனரீதியிலான முரண்பாடுகள் எவ்விதத்திலும் எழாதிருக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, தேவையற்ற வதந்திகளைப் பரப்புவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறும் அவர்களைக் கைதுசெய்யுமாறும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விசேட கூட்டத்தில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் கலந்துகொண்டார்.

இதேவேளை -

அவசரகால விதிகளின் 26ஆவது பிரமாணங்களின் விசேட வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

இதன்படி, தேசத்துரோக கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் அல்லது கிளர்ச்சியைத் தூண்டுபவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படும். (ஐ)

பண்டத்தரிப்பிலுள்ள சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் முதலுதவிப் பயிற்சிபெற்ற யுவதிகளுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் யாழ்.மாவட்ட ஆணையாளர் க.அருந்தவராஜா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். உதவி மாவட்ட ஆணையாளர் செல்வி க.தயாளினி, பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏ.வி.துரையப்பா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-115)

(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)

ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தமிழ் மொழித் தினத்தையொட்டி இந்த ஆண்டு 'கவின் தமிழ்' என்னும் சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது. சஞ்சிகைக்கான ஆக்கங்கள் கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் படைப்பாளிகளிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

படைப்பாளிகள் கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாவல்துணுக்குகள் போன்றவற்றை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் மு.இராதாகிருஷ்ணன் (இதழாசிரியர், கவின் தமிழ்), மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு - கிழக்கு மாகாணம், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-117)

கப்பலில் 'மலத்தியோன்'

தென்மராட்சி,மே4

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு 'மலத்தியோன்' செஞ்சிலுவை சர்வதேசம் குழுக் கப்பல் மூலம் கொண்டு வரப் பட்டுள்ளது. (க-117)

ஊர்காவற்றுறை தணுவில் பகுதியிலுள்ள

பனந் தோட்ட வேலியைக் கண்டபடி வெட்டி நாசப்படுத்தும் படையினர்

யாழ்ப்பாணம்,மே 4

ஊர்காவற்றுறை தணுவில் பகுதியிலுள்ள பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான பனந்தோட்டத்தைச் சுற்றியுள்ள வேலியைக் கடற்படையினர் கண்டபடி வெட்டி நாசம் செய்து வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

பெரும் செலவில் அமைக்கப்பட்ட இந்த வேலியை கடற்படையினர் தங்களின் நடமாட்டத்திற்கு வசதியாக வெவ்வேறு இடங்களிலும் வெட்டிப் பாவிக்கின்றனர். இதனால் வேலி பல இடங்களிலும் அறுந்து அலங்கோலமாகக் காணப்படுகிறது.

படையினரின் நடவடிக்கையினால் சபைக்கு பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் வேறு சில சிரமங்களையும் எதிர்நோக்க வேண்டியதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (க-4)

பொது விடுமுறைகளை குறைக்குமாறு மத்திய வங்கி யோசனை

கொழும்பு,மே4

பொது விடுமுறை தினங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று மத்திய வங்கி பிரேரித்துள்ளது. அதன் 2000 ஆம் ஆண்டின் அறிக்கையில், சமய விடுமுறைகளுக்குப் பதிலாக குறித்த சமயத்தவர்கள் விடுப்புப் பெறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என மத்திய வங்கி யோசனை தெரிவித்துள்ளது.

2000 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி ஆறு சதவீதம் ஏற்பட்டிருந்தது. ஆனால் இவ்வாண்டின் முதல் மூன்று மாதங்களில் வளர்ச்சி வதம் 4.5ஆகக் குறைந்துள்ளது. ஏற்றுமதிகள் குறைவடைந்தமை, நெல் உற்பத்தி வீழ்ச்சி, எரிபொருள் பாவனை அதிகரிப்பு என்பன இந்த வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

2000ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி 6.2 வீதத்திற்கு உயர்ந்த வேளை தொழில்வாய்ப்பு 7.7 சதவீதமாகக் குறைவடைந்தது. வெளிநாடுகளின் மூலதனம் 27 சதவீதமாக அதிகரித்திருந்தது.

மொத்த உற்பத்தியின் 26.7 சதவீதமாகவிருந்த அரச செலவீனம் இவ்வாண்டில் 26.8 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க)

3 படையினர் காயம்

கொழும்பு,மே4

உசன் பகுதியில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகள் ஆட்லறி மற்றும் மோட்டார்கள் மூலம் நடத்திய தாக்குதலில் 3 படையினர் காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

நியமனக் கடிதங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே4

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றி வந்த 28 கூட்டுறவு மொத்தவிற்பனை நிலைய (சதொச) ஊழியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாக ஈ.பி.டி.பி அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்குரிய இந்த நியமனக் கடிதங்கள் யாவும் ஈ.பி.டி.பியின் யாழ். தலைமைச் செயலகத்தில் வைத்து வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. (ம)

சின்னஞ்சிறு விளம்பரம்

தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, காளி கோயிலடியைச் சேர்ந்த பிரவீந்திரன் என்பவருடைய விசேட அ.அட்டை (இல. 0903027908) யாழ்.நகர்ப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியிலோ அல்லது 764 இலக்க மினிபஸ் (முஜிதா மினிபஸ்) ஸிலோ ஒப்படைத்து உதவவும் (87338)

தேவை

புதிய, பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் தேவை. தொடர்பு:- R.மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி வீதி) யாழ்ப்பாணம். (87351)

விற்பனைக்கு

புதிய அனலொக் + டிஜிரல் 5000 CHANNEL றிசீவர், அல்பா கோல்ட் அனலொக் றிசீவர், EROSTAR LNBF 6 அடி டிஸ்க் (அமெரிக்கா) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 213, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.2863 (87375)

அபூர்வ ஜோதிடம்

சித்தரின் தேவரகசிய ஏட்டின் மூலம் தீராத அவஸ்தை தரும் நோய் உடன் விலகல். அதிர்ஷ்ட பலன் பெறல். சனி, ஞாயிறு 8.30-5.00p.m. தொடர்பு:- ஆடியபாத வீதி, சரஸ்வதி மில் லேன், கொக்குவில் கிழக்கு. (87362)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் தினந்தோறும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- தாமிரா, 36/1, ஆசீர்வாதப்பர் வீதி, கச்சேரி - நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (T.P.3649) (87348)

மணமகன் தேவை

இந்து கௌரவமான நற்குடும்பத்தைச் சேர்ந்த, 35வயது, செவ்வாய்த் தோஷமற்ற, அழகான பெண்ணுக்கு நல்ல நிலை உத்தியோகத்தர் அல்லது தொழில்சார்நிலை மணமகன் தேவை. சிறப்பான சீதனம் வழங்கப்படும். சகோதரர்கள் உயர்கல்வியுடன் வெளிநாட்டிலுள்ளார்கள். மாற்றுச் சம்பந்தமும் கவனிக்கப்படும். திருமண சேவை நிறுவனங்கள் சேவை வழங்கினால் தரகுப்பணம் வழங்கப்படும். தொடர்புகளுக்கு: விள. இல.1273, மே/பா உதயன். (87122)

மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 36 வயது, அச்சுவினி நட்சத்திரம், தோஷம் குறைவு, 7இல் செவ்வாய், கிரகபாவம் 44 உடைய அழகிய பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகன் தேவை. 33 வயது M.Sc. கணனிக் கல்வியுடன் இங்கிலாந்தில் பணிபுரியும் சகோதரனுக்கு மாற்று சம்பந்தம் செய்யலாம். ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்க: விள. இல.1279, மே.பா. உதயன். (87357)

தவறிவிட்டது

5 ஆம் வட்டாரம், நெடுந்தீவைச் சேர்ந்த நடராசா அனிதா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 827810932V), வீசேட அ.அட்டை (இல. 0914001100) என்பன 01.05.2001 அன்று யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் முரளி வீடியோ சென்ரர், கன்னாதிட்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் 500/= வழங்கப்படும். (87361)

வாழ்வகத்தில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே4

மானிப்பாயில் இயங்கும் 'வாழ்வகம்'விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில் வழிப்புல வலுவிழந்த மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் ஞாயிறு காலை 9.30 மணிக்கு இராமநாதன்கல்லூரி முன்மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆ.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா கலந்து கொள்வார்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ரெ.இருதயநாதன், 'றான்' நிறுவனக் கணக்காளர் லயன் கே.தணிகாசலம், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன், உடுவில் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)

முன்னாள் இராணுவக் கப்டன் கைது

கொழும்பு,மே4

கந்தளாயில் பொக்கிசங்கள் பாதுகாக்கப்படும் நிலையம் ஒன்றிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள் திருடப்பட்ட குற்றச்சாட்டில் ஓய்வு பெற்ற இராணுவக்கப்டன் ஒருவர் நீர்கொழும்புப் பொலீஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. நீர்கொழும்புப் பொலீஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (க)

தேவை

தரம் 6 - 11 வரை கணிதம் கற்பிக்கக்கூடிய திறமையும் அனுபவமும் (புதிய பாடத் திட்டத்தில்) உள்ள ஆசிரியர் தேவை. திறமைக்கு உகந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:-
சி.சிவசக்தி B.A.(cey)
(ஆசிரியை)
640, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(87371)

JAFFNA COLLEGE
INSTITUTE OF AGRICULTURE

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

SHORT COURSE IN AGRICULTURE

குறுகியகால விவசாயப் போதனா சாதனா பயிற்சிநெறி

4 மாத காலம் விவசாய மூலதத்துவம், பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம் ஆகிய துறைகளை உள்ளடக்கிய இலவசப்பயிற்சி நெறிக்கு க.பொ.த சாதாரண தரம் கல்வி கற்ற 16 - 26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி நெறிக் காலத்தில் உதவு தொகை வழங்கப்படுவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 23.05.2001 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு :-

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
(87362)

---

20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03
-
01
-
1948

மறைவு
15
-
04
-
1981

திருமதி அ.கமலாதேவி (B.A.)

(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

திதி : 04-05-2001

அன்பின் திருவுருவாய் பண்பின் பிறப்பிடமாய் விளங்கி, எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் இருபதானாலும், உங்கள் நினைவுகள் என்றும் எம்முள் உயிர்வாழும்.

உங்கள் நினைவால் வாடும்:
தாயார், சகோதரன், மைத்துனி,
மருமகன், மருமகள், சகோதரர்கள்,
'அக்கா அகம்', **சகோதரிகள், சிறியத்தந்தையர்கள்,**
இணுவில். **சிறியதாய்மார்கள், மாமன்மார்,**
(87373) **மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார்.**

முதலாம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு
15
-
07
-
1920

உதிர்வு
15
-
04
-
2000

திருமதி சிவகாமிப்பிள்ளை கந்தையா

திதி:- 04-05-2001

"யோகிகள் உத்தராயண காலத்தில் வளர்பிறை நாள்களில் பகல் நேரத்தில் வெளிச்சம் இருக்கும் பொழுதே ஒளியுடன் கூடித் தங்கள் உடலை விடுகிறார்கள். ஒளியிலிருந்து புறப்பட்டு, ஒளியூடே சென்று ஒளியிலே கலக்கிறார்கள். பின் பரம்பொருளை அடைந்து மறுபடி பிறப்பதில்லை" - கீதாவாகிஹிரினி

அம்மா ஆண்டு ஒன்று கடந்தாலும்
உங்கள் நினைவில் வாழும்:

எம்.எஸ்.கந்தையா,
தாவடிச்சந்தி,
கொக்குவில்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(87353)

ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
1944
.
08
.
15

விண்ணில்
1996
.
04
.
30

திருமதி சின்னம்மா மகாலிங்கம்

திதி : 04.05.2001

வழி காட்டி வல்லோராய் வளமெய்து ஓங்கி நலம் வாழ நமையிங்கு நகர்த்திட்ட தலைவி ஒளி நீங்கி ஐந்தாண்டு ஒழிந்தோடினாலும் - எம் விழி நீரில் ஈரங்கள் விட்டகலவில்லை!

- குடும்பத்தினர்
நகுலேஸ்வரா வீதி,
கீரிமலை.

தெல்லிப்பழை. (87356)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
20
-
09
-
1918

மறைவு
15
-
04
-
2000

அமரர்
சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு

(ஓய்வு பெற்ற தலைமை அலுவலக கூட்டுறவுப் பரிசோதகர்)

திதி: 04-05-2001

ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது உம் நினைவு, எத்தனை ஆண்டுகள் சென்றிடினும் உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது.

- குடும்பத்தினர்

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(87377)

நூல் வெளியீடு

'கணிப்பொறி - 2000' நூல்வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ்.கல்விக்கோட்ட உதவிக்கல்விப்பணிப் பாளர் ஆ.இராஜகோபால் தலைமையில் நடைபெற உள்ளது.

கு. நிராயப்பு எழுதியுள்ள இந்த நூலின் வாழ்த்துரையை அருட்திரு. ஜே.பி ஈ. செல்வராஜாவும், வெளியீட்டுரையை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும், கணிப்புரையை கலாநிதி எவ். எக்ஸ். ஜெயசேகரம் அடிகளும், சிறப்புரையை பிரதிக் கல்விப்பணிப்பாளர் நா. வரதராசாவும் நிகழ்த்துவர்.

கொழும்பில் தமிழர்கள் மீதான பாதுகாப்புக் கெடுபிடி அதிகரிப்பு

கொழும்பு, மே 4

கொழும்பில் தமிழர்களுக்கு எதிரான பாதுகாப்புக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ் மக்கள் கடும் விசனமடைந்துள்ளனர்.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி போன்ற தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பொலிஸார் அடிக்கடி வீதித் தடைகளை ஏற்படுத்தி திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரத்தியேக டியூசன் வகுப்புகளுக்குச் சென்று வரும் மாணவர்கள் சிவில் உடை தரித்த பொலிஸாரால் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். வெள்ளவத்தை ராமகிருஷ்ணமிஷன், தமிழ்ச்சங்கம், பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபம் போன்றவற்றில் நடைபெறும் தமிழ் விழாக்களில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பும் தமிழர்களையும் கொழும்பு 'ரெயிட் பொலிஸார் (Raid Police) தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தி வருகின்றனர்.

கடந்த சில மாதங்களாகத் தளர்வடைந்து காணப்பட்ட கெடுபிடிகள் தற்போது மீண்டும் அதிகரித்திருப்பதாக தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியருக்கு வீதி ஒழுங்குப் பயிற்சி நெறி

மக்கள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை ஆசிரியர்களுக்கு முதலுதவி, வீதி ஒழுங்கு விரிவுரையாளர் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 2 மணி வரையும் 6 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் இந்தப் பயிற்சி நெறி நடைபெறவுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்காத ஆசிரியர்களும், இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளலாம் என்று சங்கம் அறிவித்துள்ளது. (க)

இடம்பெயர்ந்து நாடோடிகளாகத் திரியும் மக்கள்

சொந்த இடங்களில் மீளக்குடியமர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

கூட்டணியின் மே தினத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 4

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து நாடோடிகளாகத் திரியும் மக்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் மீளக் குடியமர்வதற்கு அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இணுவிலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேதினக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

★ தமிழ்த்தேசிய இனத்திற் குரித்தான சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஆட்சி உரிமையை அங்கீகரித்து இக் கொடிய போரை நிறுத்தி, இந்நாட்டில் அமைதியை ஏற்படுத்துமாறு இலங்கை அரசையும் சர்வதேச சமூகத்தையும் வலியுறுத்தி நிற்கிறோம்.

★ தொழிலாளர் உரிமை சாசனத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதுடன் வாழ்க்கைச் செலவுக்கேற்பவும் வாழ்க்கைச் சுட்டெண் அடிப்படையிலும் சம்பளத்தை வழங்க வேண்டும் என்றும் அரசை வலியுறுத்துகின்றோம்.

★ மக்களின் ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகளையும் சிறப்பாக வடக்கு—கிழக்கை வாழ்விடமாகக் கொண்ட மக்களின் வாழும் உரிமைகளையும் இன்னும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிச் செயலாளர் எஸ். தேவகுலநாயகம் தலைமை யுரையில் கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் சுய நிர்ணய மாநிலத்தைக் கேட்கிறார்கள். அரசும் அதற்குச் சம்மதித்துள்ள வேளையில், அர்த்தமற்ற போராட்டத்தை புலிகள் நிறுத்தி மக்கள் படும் 25 வருட கால கஷ்டங்களைப் போக்க வேண்டும். மக்கள் விரும்பும் கட்சிக்கு ஆதரவளிக்க வாய்ப்புகள் அளிக்கவேண்டும்.

40 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிக்கப்பட்டுள்ளது இந்நாட்டில் சிங்களத்துக்களுக்கு உரிய உரிமை தமிழ் மக்களுக்கும் உண்டு சிங்களத்தைப போல தமிழ் மொழியும் அரச கருமமொழியாகும். பேச்சு எழுத்து சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளன. — என்றார்

மற்றும் பலர் அங்கு உரையாற்றினர். (க-173)

அரசியல் தெளிவற்ற நிலையே தமிழர் துன்பங்களுக்குக் காரணம்

மேதினக் கூட்டத்தில் பொ. ஐ. மு. பிரமுகர்

யாழ்ப்பாணம், மே 4

சிறுபான்மை இனமான தமிழ் இனம் தான், உலகத்தில் துன்பங்களை அனுபவித்து வருகிறது. தெளிவான அரசியல் கொள்கை இன்மையே இத்துன்பங்களுக்கு எல்லாம் காரணமாகும். அரசியலில் தெளிவான நிலைக்கு முன்னுரிமை கொடுத்தால்தான் துன்பங்கள் நீங்க வழி பிறக்கும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த எஸ். கே. தங்கவடிவேல் யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், தொழிற்சங்கங்களும் இணைந்து நடத்திய மே தின விழாவில் பேசுகையில் கூறினார்.

யாழ். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் எஸ். தேவகுல நாயகம் தலைமையில் சுதந்திரக்கட்சி அலுவலகத்துக்கு அருகில் இம்மே தினக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எஸ். கே. தங்கவடிவேல் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் தான் தமிழர்களுக்கு துன்பங்களும், கஷ்டங்களும் ஏற்பட்டன. அமரர் பண்டாரநாயக்கா சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் அவரது ஆட்சிக்காலத்தில் நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டது. தமிழ் மக்கள் கல்வி, வேலைவாய்ப்புகளில் உயர்ந்திருந்தனர். தொழிலாளர் தினமான மே தினத்தை விடுமுறை ஆக்கியவரும் அமரர் பண்டாதான்.

அமரர் பண்டா ஆட்சிக்கும் சிறிமா ஆட்சிக்கும் இடையில் ஜே. ஆர். ஆட்சி வந்திராவிட்டால் தமிழர்களுக்கு இந்நிலை வந்திருக்காது.

நாம் செய்த தவறுகளை

உழைக்கும் வர்க்கத்தினரே போரினால் பெரிதும் பாதிப்பு

ஊர்காவற்றுறைக் கூட்டத்தில் பேச்சு

ஊர்காவற்றுறை, மே 4

எமது பிரதேசத்தில் தொடரும் யுத்தத்தினால் உழைக்கும் வர்க்கமே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் இந்த மே தின நன்னாளில் நாம் அனைவரும் அணி திரண்டு சமாதானத்திற்காகக் குரல் கொடுப்போம்.

ஊர்காவற்றுறை திறந்த வெளி அரங்கில் நடந்த ஈ. பி. டி. பியின் மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

தீவகத்தில் உள்ள 39 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்திருந்த மே தினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:—

நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம். அதன் மூலம் நாட்டின் அழிவுகளைத் தடுத்து நிறுத்த முடியும். உழைக்கும் வர்க்கத்தினர் அனைவரும் ஓரணியில் திரண்டு குரல் கொடுப்பதன் மூலம் சமாதானத்தை விரைவில் எட்ட முடியும் — என்றார்.

இந்த மே தின நிகழ்வில் வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகரகுருமூர்த்தி, நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள்யு. அரியநாயகம் மற்றும் தீவக கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், ப. தெ. வ. அபிவிருத்திக் கூ. ச. தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். (க-16)

யாழ். மாநகர சபையில் கடமையாற்றும்

மருந்து தெளிக்கும் ஊழியருக்கு 5 வருடங்களாகச் சீருடை இல்லை

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவின் கீழ் கடமையாற்றும் 'மலேரியா எதிர்ப்பு' மருந்து தெளிக்கும் ஊழியர்களுக்கு கடந்த 5 வருடங்களாகச் சீருடை மற்றும் சலுகைக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்று புகார் கூறப்படுகிறது.

மாநகர சபையின் சிற்றூழியர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கப்பட்ட போதும் மலேரியா எதிர்ப்பு மருந்து தெளிக்கும் ஊழியர்களுக்கு சீருடைத் துணிகள் வழங்கப்படவில்லை. இவர்களிடம் சீருடைத்துணி வழங்குவதற்கு என்று கூறி அளவுகள் எடுக்கப்பட்ட போதும் 1997 ஆம் ஆண்டிற்குப்பின்னர் சீருடைத் துணிகள் வழங்கப்படவில்லை.

இந்த ஊழியர்களுக்கு நீண்ட காலமாக வழங்கப்பட்டு வந்த சைக்கிள் பராமரிப்புச் செலவுத் தொகையான 112 ரூபாவும், வர்த்தக நிலையங்களுக்கு மருந்து தெளிப்பதன் மூலம் பெறப்பட்ட பணத்தில் இருந்து ஊழியர்களுக்கு வழங்கி வந்த 250 ரூபா கொடுப்பனவும் கூடத் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மாதம் ஒன்றுக்கு இரண்டு கட்டி சவர்க்காரத்தைத் தவிர வேறு எதுவும் தமக்குக் கிடைப்பதில்லை என்று ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர்.

[க 6-4]

தடகள விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 4

வலி. கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்தியலிங்கம் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர்ப் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் (நிஷாந்தன்), பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ஏ. டபிள்யு. அரியநாயகம், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 800 மீற்றர் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இறுதி ஓட்டப் போட்டிகள், விநோத உடைப் போட்டி, ஆண்கள், பெண்களுக்கான அஞ்சல் இறுதிப்போட்டிகள் ஆகியன உட்பட பல விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் விளையாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (க)

இலங்கையில் 800 எய்ட்ஸ் நோயாளர்கள்

கொழும்பு, மே 4

அதிகாரபூர்வமான புள்ளி விவரங்கள் வேறு விதமாகத் தெரிவிப்பினும், சுமார் 800 இலங்கையர்கள் 'எய்ட்ஸ்' நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எச். ஐ. வீ. கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்களில் அரைவாசிப் பேர் வெளிநாடுகளில் வேலை தேடிச் சென்றவர்களாவர் என்று சுகாதார அமைச்சர் செனவிரத்ன பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் தெரிவித்தார்.

யு. என். எய்ட்ஸ் நிறுவனமும், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகமும் இணைந்து வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களுக்கு நடத்த உத்தேசித்திருக்கும் எய்ட்ஸ் தடுப்புத் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (க)

பிரதியமைச்சரின் மெய்க்காவலர்கள் கண்டியில் கைது

கொழும்பு, மே 4

மே தின வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, கண்டி அஸ்கிரிய பொலீஸ் மைதானத்திலுள்ள ஆயுதங்களுடன் நுழைய முயன்ற விவசாயப் பிரதி அமைச்சர் சாலித்த திசாநாயக்கவின் இரு மெய்க்காவலர்கள் அமைச்சரவைப் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மே தினக் கூட்டம் அனுராதரத்வத்தை தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ஒருவர் கையில் ரவையேற்றப்பட்ட நிலையிலும் மற்றவர் கையில் ரவையேற்றப்பட்ட பிறவுணிங் பிஸ்டல் ஒன்றும் இருக்கக் காணப்பட்டதாக இன்ஸ்பெக்டர் மகேந்திரன் தெரிவித்தார்.

துப்பாக்கிகளை எடுத்துச் சென்றதற்கான காரணம் மற்றும், பல முக்கிய பிரமுகர்கள் சமுகமளித்திருந்த இடமொன்றினுள் செல்ல வேண்டியிருந்த தேவை என்ன என்பது பற்றிய விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

[க]

யாழ்ப்பாணம் மாநகர சபை

1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பொருள்கள் சேவைகள் வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உள்ளூராட்சிச் சபைகளினாற் திரட்டப்படும் வருமான அறவீடுகள் மீதான

பொருள்கள் சேவைகள் வரி

உள்ளூராட்சிச் சட்டம், நகர சபைக் கட்டளைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் விஸ்தரிக்கப்பட்டுள்ள வருமான மூலகங்களின் மீது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க பொருள்கள் சேவைகள் வரிச் சட்டத்தின்படி, பொருள்கள் சேவைகள் வரிக்குள் வரும் சேவைகள் மற்றும் இதன் கீழ் விலக்குப் பெறும் வருமானங்களும் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் பொருள்கள், சேவைகள் வரிக்கு உட்படுத்தப்பட வேண்டிய வருமானங்கள் அல்லது அறவீடுகள் என உள்ளூராட்சி இறைவரிச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட ஒவ்வொரு வகையான வருமான அறவீட்டுடன் மேலதிகமாக பொருள்கள் சேவைகள் வரியாக 12.5% தொகையை அறவிட்டு அதனை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் அவர்கள் பணித்துள்ளார்.

எனவே கீழ்க்காணப்படும் பொருள்கள் சேவைகள் வரிக்கு உட்படுத்தப்பட்ட வருமானங்களுடன் மேலதிகமாக 12.5%ஐ பொருள்கள், சேவைகள் வரியாகவும் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன். இந்நடைமுறை 2001ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் அறியத் தருகின்றேன்.

பொருள்கள் சேவைகள் வரியின் கீழ் வரும் வருமானங்கள்

1. வியாபார உரிமங்கள்
2. பெயர்ப்பலகைகள் விளம்பரக் கட்டணம்
3. ஒப்பந்தப் பத்திரங்கள் மீதான சேவைக் கட்டணம்
4. கணனிப் பயிற்சி தொடர்பான சேவைக் கட்டணம்
5. அறவிடக்கூடிய கட்டணங்கள்
6. விசேட கட்டணங்கள் (வாகனக் கூலி)
7. வாகன நிறுத்தற் கட்டணங்கள்
8. கேள்விப்படிவம் விநியோகித்தல்
9. கழிவு வரி கட்டணம் (கழிவகற்றும் வாகனக்கூலி)
10. சுற்றுச்சூழல் சான்றிதழ் (சூழல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரக் கட்டணம்)
11. நிர்மாணக் கழிவுப் பொருள்கள் அகற்றல் கட்டணம்
12. கொல்களக் கட்டணம்
13. பங்குச்சந்தை விற்பனை
14. வாடகைக்கு வழங்கல் (ஆதனம்)
15. கட்டட விண்ணப்பப்படிவ விற்பனை
16. அமைவுச் சான்றிதழ் விநியோகித்தல்
17. பதிவுக் கட்டணங்கள்
18. சான்றிதழ் வழங்கும் சட்டணங்கள்
19. காணி உபபிரிவு அனுமதிக் கட்டணம்
20. வீதி வரைபடம் வழங்குதல்
21. கழிவுப்பொருள் விற்பனை
22. சந்தைக்கடை வாடகை
23. சந்தைக் குத்தகைக் கட்டணம்
24. இறைச்சிக்கடை கேள்வி வரி
25. படமாளிகை அல்லாத அரங்காட்டு வரி
26. விளையாட்டுக் கட்டணங்கள்
27. செய்தித்தாள் விற்பனை (பாவனை முடிந்தவை)
28. நன்மதிப்புத் தொகை

பொருள்கள் சேவைகள் வரியிலிருந்து விலக்குப் பெறும் வருமானங்கள்

1. ஆதன வரி
2. வாகன மிருக வரி
3. தண்டங்கள்
4. நிலையான வைப்பு வட்டி
5. ஊழியர் கடன் வட்டி
6. காணி மாற்று முத்திரைத் தீர்வை
7. விற்பனை வரி
8. சம்பள மீளாய்வு
9. மாநகர அங்கத்தவர் படி மீளளிப்பு
10. பூமிதானக் கட்டணம்
11. நீதிமன்றத் தண்டம்
12. உதவுதொகைகள்
13. எல். எல். டி. எவ். கடன் (உள்ளூர் நிதி அபி. கடன்)
14. வீட்டு வாடகை
15. அங்கீகாரமற்ற செம்பிப்பு மீதான தண்டம்
16. வீதி வெளிச்சம் தொடர்பான மீளளிப்பு
17. களியாட்ட வரி
18. நூலகக் கட்டணங்கள்

மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2001-05-03

(பி/16519)

சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, மே 4

அளவெட்டி ஸ்ரீ மகா முத்து மாரி அம்பாள் தேவஸ்தான நவகுண்டபக்ஷ புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு நடைபெறும்.

முத்துமாரி அம்பிகை, விநாயகர் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கான கும்பாபிஷேகம் பிரம்மஸ்ரீ செந்தில் நாதசர்மா சந்திர வாமதேவ சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெறும். (க-152)

★ ★ ★

வடமராட்சி, மே 4

புலோலி மேற்கு தம்பசிட்டி வைரவர் கோயில் நூதனமகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (க-173)

★ ★ ★

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோயில் வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

அன்றையதினம் பக்தகோடிகளின் காவடி, ஆட்டங்கள் இடம்பெறும். மறுநாள் தீர்த்தோற்சவம் நடைபெறும். (3-15)

விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, மே 4

நல்லூர் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இடையேயான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு கோண்டாவில் ஸ்ரீநாரயண சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு :-

★ கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் எதிர் திருநெல்வேலி முடமாவடி ஞானவைரவ சனசமூக நிலையம்.

★ கோண்டாவில் மக்கள் முன்னேற்றக்கழகம் எதிர் கோண்டாவில் விவேகானந்தா சனசமூக நிலையம். (க-86)

★ ★ ★

யாழ். மாவட்டதாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் கொக்குவில் மேற்குஸ்ரீ வராப் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டியில்இன்று வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் இளம்பிறை விளையாட்டுக் கழகமும் எதிர் காந்திஜி விளையாட்டுக்கழகமும் பங்கு பற்றுகின்றன.

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 4

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்று வரும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் பங்கு பற்றுகின்றன. (உ-3)

கலந்துரையாடல்

தென்மராட்சி, மே 4

பச்சிலைப்பள்ளி இடம் பெயர்ந்தோர் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை இன்று சந்தித்துத் தமது பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்ற வசதியாக சங்கப் பிரதிநிதிகளையும் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் இன்று காலை 10 மணிக்கு மானிப்பாய் வீதியில் உள்ள பணைப் பிரதேச செயலகத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-117)

நேர்முகப் பரீட்சை நேர மாற்றம்

யாழ்ப்பாணம், மே 4

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற விருந்த —தெல்லிப்பழை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த— தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்காக இன்று காலை 8 மணிக்கும்—

இன்று காலை 8.30 மணிக்கு நடைபெற விருந்த சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை இன்று முற்பகல் 11.00 மணிக்கும்—

வலிகாமம் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற வுள்ளதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார். (உ-10)

முக்கிய அறிவித்தல்

வாடிக்கையாளரின் கவனத்துக்கு தவிர்க்க முடியாத காரணத்தால் எமது விதாபனம் இன்று மட்டும் (04-05-2001 வெள்ளிக்கிழமை) மூடப்பட்டிருக்கும். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

-நிர்வாகம்-

வஸ்தியன் ஹோட்டல்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

(87402)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவு

கடந்த 15-03-2001 அன்று பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 06-05-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்குக் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சங்க அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம்தரவும்.

■ செயலாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
சாவகச்சேரிப் பிரிவு.

(சி/16541)

இதய அஞ்சலி

அமரர் வைரவப்பிள்ளை இராசக்கோன்

(தமிழ்க்காங்கிரஸ், திருகோணமலை அமைப்பாளர்)

தீந் தமிழர் பூமியாம் திருகோணமலையில்
நால் வர்ணக் கொடியேற்றி மகிழ்ந்தவரும்,
மாமனிதர் குமாரின் கொள்கைவழி
உழைத்த உத்தமரும் எமது இனிய
நண்பரும், பழம்பெரும் தமிழ்க் காங்கிரஸ்
-வாதியுமான இலட்சியச் செம்மல்
இராசக்கோன் அவர்களின் மறைவுச்
செய்தியறிந்து துயருறுகின்றோம்.
அவரது குடும்பத்தினருக்கு எமது மனம்
நெகிழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு, அமரரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்,
யாழ்ப்பாணம்.

(87894)

7 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

தோற்றம்: 02 — 07 — 1923

மறைவு: 23 — 04 — 1994

முருகேசு தம்பிமுத்து

(முன்னாள் ஒய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை செயலாளர்)

திதி: 04-05-2001

மனிதப் பிறவியெனும் மாண்புடைய பிறவி
அதைப் புனிதப்பிறவியாய் செய்வதே பேரின்பம்
என்றமைய வாழ்ந்துகாட்டிய அப்பாவே
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில்..

நினைவு கூரும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

த. நந்தகுமார் (மகன்)
(இராம அலுவலர்)
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(87409)

நன்றியுடன் பாராட்டுகின்றோம்

வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சினால் தீவக அபிவிருத்திப் பரிசோதகர்களாக எம்மை நியமனம் செய்தமையையிட்டு

வடக்கின் அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்குக் கிழக்கின் தமிழ் விவகாரங்களுக்கான அமைச்சர் மாண்புமிகு

K.N.டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளரும், தீவக அமைப்பாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானும் மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவருமாகிய

கௌரவ N.மதனராஜா

அவர்களுக்கும் எமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(87397) - **தீவக அபிவிருத்திப் பரிசோதகர்கள்.**

பாராட்டி மகிழ்கின்றோம்

எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்ட தென்மராட்சி யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலய அதிபர், மதிப்பிற்குரிய

திரு.ச.ஞானலிங்கம் அவர்கள்

சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டும் இல.அதிபர் சேவை தரம் I க்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டும் எமது உளங்கனிந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் எமது பாடசாலையின் ஆசிரியை

திருமதி தை.சிவஞானரத்தினம் அவர்கள்

இலங்கை ஆசிரியர் சேவை தரம் I க்குப் பதவியுயர்வு பெற்றதையிட்டும் எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/அராலி சரஸ்வதி ம.வித்தியாலயம்.

(87404)

நித்தமும் நினைந்திடும் நீங்காத நினைவலைகள்

(10ஆம் ஆண்டு)

மண்ணில் 21 - 11 - 1920

விண்ணில் 05 - 05 - 1991

திருமதி மரியமுத்து மார்சலீன்பிள்ளை

''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

இவரின் ஆத்ம சாந்திக்காக நாளை (05.05.2001) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்திலும் மாலை 5 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

திருப்பலியில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி
மற்றும் உறவினர்கள்.

தெணியம்பை வீதி,
வல்வெட்டித்துறை. (87395)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/கல்வியங்காடு இந்த தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர்

திருமதி செ.சகாதேவன்

அவர்கள் அதிபர் சேவை தரம் 2-1க்குப் பதவி உயர்வு பெற்றமையையிட்டும் பாடசாலை முன்னேற்றத்துக்கும் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையை ஒரு முன்னணிப் பாடசாலையாகத் திகழுவதற்கு அரும்பாடுபட்ட எமது அதிபரின் பணி மேலும் தொடரவேண்டும் என்றும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(87389)

ஆங்கிலம்

அரசபள்ளி பயிற்றப்பட்ட ஆசிரியர்.
இல்லங்களுக்கும் வருகைதரப்பட்டுக் கற்பிக்கப்படும்.

	O/L	A/L
மணித்தியாலம்	100/-	125/-

தொடர்பு:- இ.சிவராஜா,
606/1, K.K.S. வீதி,
நாச்சிமார்கோயில்,
யாழ்ப்பாணம்.
M.ரவீஸ்வரன்,
அந்தோனியார் வீதி,
(87396) சுன்னாகம்.

ஒகன் இசை வகுப்புகள்
புதிய பிரிவு
நாளை 05.05.2001
சனிக்கிழமை 10 மணிக்கு
ஆரம்பமாகிறது.
தூரிகை
M.M.V. றோட்,
(87380) நெல்லியடி.

BEACON
நாடக அரங்கியல்
2001 தரித மீட்டலுடன் கூடிய
வினா விடை வகுப்புகள்
ஆரம்பம்:- SAT. 9 - 10
2002 சிங்கள நாடக வரலாறு
ஆரம்:- SAT - 11- 12
2003 ஆரம்பத்தில் இருந்து.
ஆரம்:- SAT 10 - 11
ஆசிரியர்:-T.J. சுதன்.
(87387)

BEACON
அரசியல்
A/L, G.A.Q.
B.A I, BA II
ஆகிய வகுப்புக்கள்
(87386) நடைபெறுகின்றன.

ராஜா
யாழ்ப்பாணம்
அஜித், லைலா
மற்றும் பலர் நடிப்பில்
தீனா
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்)

லக்ஷ்மி
இணுவில்
புதிய வெளியீடு
விஜயகாந்த், ரம்யாகிருஷ்ணன்,
பிரகாஷ்ராஜ் நடிப்பில்
வாஞ்சிநாதன்
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (புதியநேரம்)

நாகம்ஸ்
சுன்னாகம்.
கமலஹாசன், ஜோதிகா,
ஜெயராம்,
தேவயானி
நடித்த
தெனாலி
(ரீல்ஸ் வெளியீடு)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)

சங்கானை ஜூபிலி விளையாட்டுக்கழக அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல.	687
இரண்டாம் பரிசு இல.	187
மூன்றாம் பரிசு இல.	474

ஆறுதல் பரிசுகளின் இலக்கங்கள்:-

630, 4422, 264, 2366, 848

அதிர்ஷ்டலாபச் சீட்டு அன்பளிப்பு:-

சந்தியா மல்டிகோட்யாட், பெரியகடை, யாழ்ப்பாணம்.

பரிசுப்பொருள்கள் அன்பளிப்பு:-

பாக்கியரட்ணம் ஹாட்வெயர்ஸ்,	சங்கானை
ஆசைப்பிள்ளை அன் சன் கொமினிக்கேஷன்,	சங்கானை
(T.P. NO. Local 070 -212399, IDD 0094 -70 -212399)	
நிறைஞ்சனாஸ் ஹாட்வெயர்ஸ்,	சங்கானை
சுந்தர்ஸன்,	மானிப்பாய்
உதயா பேக் ஹவுஸ்,	சங்கானை
திரு.அ.சிறிஸ்கந்தராஜா,	சங்கானை
திரு.S.கந்தசாமி,	சங்கானை
திரு.செ.இராசசிங்கம்,	சங்கானை
திரு.V.சண்முகநாதமுதலி,	சங்கானை
திரு.க.ஜீவபாஸ்கரன்,	சங்கானை

பரிசுப்பொருள்களை 15-05-2001க்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும்.

(87393) - செயலாளர்.

மணமகள் ஒப்பனையாளர் கூந்தல் அலங்கரிப்பாளர்

மூன்று நாள்

பயிலரங்கு

இந்து, கிறிஸ்தவ முறைகளிலான மணமகள் ஒப்பனையுடன் சில முடியலங்கார முடிச்சுகளின் செயன்முறையும் இடம்பெறும்.

மே 7ஆம், 8ஆம், 11ஆம் திகதிகளில் காலை 9மணிக்கு ஆர்வமுடைய அனைவரும் கலந்துகொள்ளலாம்.

தூரிகை நுண்கலை வளாகம்,
M.M.V. றோட்,
நெல்லியடி.

(87381)

மரண அறிவித்தல்கள்

சேஷ் ஐயர் சத்தியோஜாதம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சேஷ் ஐயர் சத்தியோஜாதம் (முன்னாள் ஆசிரியர், யா/வசாவிளான் ம.ம.வி, யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி) நேற்று முன்தினம் (2-5-2001) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், முகுந்தன் (முன்னாள் விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம், USA), அனந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சனி (முன்னாள் விரிவுரையாளர் யாழ்.பல்கலைக்கழகம், USA), சியாமளா (ஆசிரியர்,நீர்கொழும்பு அல்ஹிலால் மத்திய கல்லூரி, முன்னாள் ஆசிரியர், யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரண்யா (USA), ஆரண்யா (USA), ஹம்சத்வனி, அமிர்தவர்ஷினி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (4-5-2001) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வத்தளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

103/6 A, MARADANA RD,
HENDALA,
WATTALA,
T.P. 077 376069

தகவல்:
ச.அனந்தன்
(மகன்)

(87385)

பொன்னையா தர்மலிங்கம்

(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர், மானிப்பாய்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கு, கலட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மலிங்கம் கடந்த (01-05-2001) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், திருமதி குலராணி கயிலைநாதன்(கனடா), திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம், காலஞ்சென்ற சௌந்தரராஜன்(ஜேர்மனி),திருமதி சுபாஜினி யோகேஸ்வரன், செல்வராஜா(கனடா), திருமதி மாலினி ஹரிமுகன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், க.கயிலைநாதன்(சுவிஸ்), த.சண்முகரத்தினம்(வருமான மேற்பார்வையாளர், வலி.மேற்குப் பிரதேச சபை - சுழிபுரம்), காலஞ்சென்ற சௌ.விஜயகுமாரி(ஜேர்மனி), த.யோகேஸ்வரன் (வவா கொமினிக்கேசன், கோண்டாவில்), செ.றோமிலா(கனடா), சி.ஹரிமுகன் (வருமான மேற்பார்வை உத்தியோகத்தர், வலி.தென்மேற்கு பிரதேச சபை - பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் ராஜநந்தன்(கனடா), ராஜநந்தினி(கனடா), ராஜராஜினி(கனடா), ராஜசுவிந்தன்(கனடா), கோகுலன்(யாழ்.பல்கலைக் கழகம்), இராகுலன் (யா/வட்டுக் கோட்டைக் கல்லூரி), காலஞ்சென்ற சுபிலா (ஜேர்மனி), திவாகரி, தேவகரி, ஜசீன்(கனடா), டினேஸ், டயான், ரஜிந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம்(02-05-2001) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

கலட்டி லேன்,
கோண்டாவில்.

தகவல்:
மனைவி: புஸ்பராணி,
பிள்ளைகள், மருமக்கள்.

(87388)

62 குழல் றொக்கட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டிருந்தது.

இந்தச் செய்திக்கே பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத் திலிருந்து தலைமையகக் கட்டளை அதிகாரி சார்பில் பிரிகேடியர் ரி.யு. முனசிங்க மறுப்பு அனுப்பியிருக்கின்றார்.

"மேற்படி செய்தியில் 62 குழல் கொண்ட றொக்கட் லோஞ்சர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் புலிகள் 06 குழல் கொண்ட றொக்கட் லோஞ்சர்கள் மூலமே தாக்குதல் நடத்தியதாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி தெரிவித்திருப்பதாக" அந்த மறுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு:-

'த சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் வரைந்த 'களநிலைவரம்' பற்றிய கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே 'உதயன்' தனது முதலாம் திகதிய பத்திரிகையில் மேற்படி செய்தியை வெளியிட்டிருந்தான்.

அந்தக் கட்டுரையை ஒட்டி, தனிப்பட்டிச் செய்தியாக யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவின் விசேட செவ்வியையும் அத்தாஸ் வரைந்திருந்தார். அந்தப் பேட்டியில், 62 குழல் கொண்ட பல்குழல் றொக்கட்டுக்களைப் புலிகள் பெற்றுக் கொண்டிருப்பது பற்றிய தகவலை அன்ரன் விஜேந்திரா வெளியிட்டதாக அத்தாஸ் குறிப்பிட்டுள்ளார்.

"62 குழல் கொண்ட பல்குழல் றொக்கட் லோஞ்சர்கள் உட்பட மிகக் கணிசமான அளவு இராணுவத் தள பாடங்களைப் புலிகள் சுவீகரித்துக் கொண்டிருப்பது பற்றிய தகவலை அவர் வெளிப்படுத்தினார். கடந்த வருடமும் கூட, ஆனையிறவிலிருந்து துருப்புகள் வாபஸான சமயத்திலும் இது பயன்படுத்தப்பட்டது" **(He disclosed that the LTTE had acquired a very substantial quantity of military hardware including 62 barrelled multi barrel rocket launchers. This had earlier been used last year too when troops were withdrawing from Elephant Pass.)** - இப்படி அந்தச் செவ்வியில் அத்தாஸ் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் -

பலாலித் தலைமையக மறுப்புக் குறித்து நேற்றிரவு இக்பால் அத்தாஸ்டன் தொடர்பு கொண்டு கேட்டோம்.

தமது பேட்டியில் 62 குழல் கொண்ட றொக்கட் லோஞ்சர்கள் குறித்து யாழ்.இராணுவத் தளபதி தம்மிடம் குறிப்பிட்டது அப்படியே உண்மை எனவும் -

அதனையே தாம் தமது பேட்டிச் செய்தியில் எந்தத் தவறுமின்றிப் பிரசுரித்ததாகவும் -

அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

(உ)

வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட தடுப்பு முகாம் ஒன்றிலேயே அந்த விதிகளின் கீழ் எவரையும் தடுத்து வைக்க முடியும்.

☆ 19(5) ஷரத்தின்படி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரும் குறைந்தது 14 நாள்களுக்கொரு தடவை அப்பிரதேசத்துக்குப் பொறுப்பான நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட வேண்டும். மாதத்துக்கு ஒரு தடவையேனும் நீதிவான் அந்த முகாம்களுக்கு விஜயம் செய்யும் போது அவர் முன்னிலையில் சகல தடுப்புக்காவல் கைதிகளும் ஆஜர் செய்யப்பட்டு அவரின் பார்வைக்கு விடப்படவேண்டும்.

- இந்தச் சட்ட விதிகளைச் சுட்டிக் காட்டியுள்ள வவுனியா நீதிவான், இந்தச் சட்ட விதிகளைத் தவறாது பின்பற்றும்படியும் -

சம்பந்தப்பட்ட முகாம்களுக்குத் தான் விஜயம் செய்யும் போது தடுப்புக் காவல் கைதிகளை தம்முன் ஆஜர் செய்வதற்கு தயாராக இருக்கும்படியும் -

சம்பந்தப்பட்ட இராணுவ, பொலிஸ் அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

(உ-164)

இனப்பிரச்சினை...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாவுக்கு மேல் அறவிடப்படுகின்றது.

பயணி ஒருவரிடமிருந்து ஆயிரத்து 575 ரூபா கட்டணம் பெறப்படுகிறது. இதன்படி 400 பயணிகளிடமும் ஒரு வழிக்கு 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறப்படுகிறது.

அதாவது இரண்டு நாள் பயணத்துக்கு மொத்தம் 15 ஆயிரம் டொலருக்கு மேல் பொதுமக்களிடமிருந்து அறவிடப்படுகின்றது.

இந்தக் கப்பலின் கொள்ளளவு ஆக 200 மெற்றிக்தொன்தான்.

ஆனால் -

மூவாயிரம் மெற்றிக்தொன் கொள்ளளவு கொண்ட 'லங்கா முடித்த' கப்பலுக்கு ஒரு பயணநாள் கட்டணம் ஆக ஆயிரத்து ஐந்நூறு டொலர் தான்.

அப்படியாயின் - 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலுக்கு ஏன் இவ்வளவு பணம் - ஐந்து மடங்கு அதிக பணம் - அறவிடப்படுகின்றது.

இந்தக் கப்பல் சேவை பற்றிய தரவுகளின் படி பயணி ஒருவரிடமிருந்து ஒரு வழிக்கட்டணமாக ஆக 100 ரூபா அறவிட்டால் போதுமானது. ஆனால் இதனைவிட பன்மடங்கு பணம் கட்டணமாக அறவிடப்படுகின்றது.

'நரோமா' கப்பல் மூலம் 100 ரூபா கட்டணத்துக்கு பயணிகள் சேவை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

அரச உயர்மட்டத்தில் செல்வாக்கு உள்ளவர்களினால் நடத்தப்படும் இந்த 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் சேவையின் வியாபாரத்துக்கு செஞ்சிலுவைசர்வதேசக் குழுவும் துணைபோவது கவலை தரும் செயலாகும்..

கொழும்பில் லீற்றர் 50 ரூபாவாக விற்பனை செய்யப்படும் பெற்றோல் யாழ்ப்பாணத்தில் 77 ரூபாவாக விற்கப்படுகிறது.

உணவுத் தினைக்களத்தினால் கோதுமை மாவைக் கொண்டு வந்து இங்கு கொழும்பு விலைக்கு விற்க முடியும் என்றால் ஏன் எரிபொருளை இங்கு கொழும்பு விலைக்கு விற்க முடியாது? - என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-5)

தென்மராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லிங்கம் ரஜனி - மன்னார்)

✪ லெப்டினன்ட் சாலினி (சுப்பிரமணியம் சுபாஷினி - கொழும்பு)

✪ லெப்டினன்ட் இன்வேங்கை (சிவராசவிங்கம் சிவநந்தினி - மாங்குளம்)

✪ லெப்டினன்ட் குலமகள்(தங்கேஸ்வரன் விஜிதா - யாழ்ப்பாணம்)

✪ லெப்டினன்ட் சாந்தம் (குமாரசாமி வசந்தமலர் - ஸ்கந்தபுரம்)

✪ லெப்டினன்ட் இசைச்செல்வன் (சுப்பிரமணியம் பிரபாகரன் - யாழ்ப்பாணம்)

✪ இரண்டாம் லெப்டினன்ட் அருளமதி (பாலகிருஷ்ணன் தனுஷ்யா - யாழ்ப்பாணம்)

✪ இரண்டாம் லெப்டினன்ட் நந்தினி (பட்டுராஜா பவளச்செல்வி. முழங்காவில்)

✪ இரண்டாம் லெப்டினன்ட் ஈழரசி (இராஜேந்திரம் மாணிக்கமேரி - யாழ்ப்பாணம்)

✪ தமிழிசை (குமாரசாமி லதா - யாழ்ப்பாணம்)

✪ குயிலினி (மதுரை வீரன் செல்வி - விசுவமடு)

✪ வானரசி (பாலன் சிவசோதி யாழ்ப்பாணம்)

✪ சமர்விழி (குலம் ஜெகதீஸ்வரி - யாழ்ப்பாணம்)

✪ கதிர்குன்றன் (கருப்பையா சசிகரன் - கிளிநொச்சி)

✪ கானகன் (ரவீந்திரராசா - விக்னேஸ்வரன் - யாழ்ப்பாணம்)

(உ-ஒ-164)

உத்தியோகப்பற்றற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் நேற்று முன்தினம் மேற்கொள்ள இருந்த தமது பயணத்தை சொல்ஹெய்ம் திடீரென 24 மணி நேரம் தாமதித்திருப்பதாக பிந்திய செய்தி ஒன்று வெளியாகியிருந்ததையும் உதயன் குறிப்பிட்டிருந்தது.

அந்தப் பிந்திய செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தபடி, சொல்ஹெய்ம் தமது பயணத்தை நேற்று மாலை வரை ஒத்திவைத்தார் என்பது நேற்றுக்காலை உறுதிப்படுத்தப்பட்டது.

வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று அங்கு புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடி விட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய - கொழும்புக்கான கனடியத் தூதுவர் - ருத் ஆட்சிபோல்ட் அம்மையாரை நேற்று முன்தினம் இரவு தூதுவர் சொல்ஹெய்ம் சந்தித்து புலிகளின் பிந்திய நிலைப்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்.

அதேசமயம் -

அரசுடன் சமாதானத்துக்கான நேரடிப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன் நடவடிக்கையாக விடுதலைப்புலிகள் பிரேரித்திருக்கும் இரு கோரிக்கைகள் தொடர்பாக அரசுத் தரப்பின் மாற்று யோசனைகள் நேற்று முன்தினம் இரவே சொல்ஹெய்முக்கு தெரிவிக்கப்பட்டன.

முதல் கோரிக்கை

நேரடிப்பேச்சுக்கு முன்னர் யுத்த நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பது விடுதலைப்புலிகளின் முதல் கோரிக்கையாக உள்ளது என்பதும் -

எனினும் அதற்கு இணங்க முடியாது என்று அரசுத் தரப்பு விடாப்பிடியாகக் கூறிவருவதும் - தெரிந்த வையே.

எனினும் பேச்சுக் காலத்தில் - வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும் - உத்தியோகப்பற்றற்ற முறையிலும் - ஒரு யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கலாம் என்று மாற்று யோசனை ஒன்றை அரசுத் தரப்பு சொல் சொல்ஹெய்முக்குத் தெரியப்படுத்தியது.

இதன் மூலம் பேச்சு நடைபெறும் காலத்தில் யுத்தம் தீவிரமடையாமல் பார்த்துக் கொள்ளலாம் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

இரண்டாவது கோரிக்கை

தம் மீதான தடை அகற்றப்பட வேண்டும் என்பது சமாதானப் பேச்சுக்கான மற்றைய முன் நடவடிக்கை என்று புலிகள் வற்புறுத்தி வந்தனர்.

ஆரம்பத்தில் இதற்கு இணங்கிய அரசுத் தரப்பு, சர்வதேச மட்டத்தில் இருந்து வந்த அழுத்தம் காரணமாக இந்தக் கோரிக்கையை கொள்கை அளவில் ஏற்பதற்கு இணங்கியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியா, மலேசியா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தியாவும் மலேசியாவும் தம்முடையபாட்டில் புலிகள் மீது தடைவிதித்தன.ஆனால் பிரிட்டனும் அமெரிக்காவும் இலங்கை கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே தங்களுடைய நாட்டில் புலிகளைத் தடைசெய்தன.

இந்த நிலையில் இலங்கை தனது நாட்டில் புலிகள் மீதான தடையை நீக்குவது அமெரிக்கா மற்றும் பிரிட்டனுடனான இலங்கையின் நல்லுறவைச் சீரழிக்கும் என இலங்கை அரசு எரிக் சொல்ஹெய்முக்குச் சுட்டிக் காட்டியிருப்பதாகத் தெரிகின்றது

எனவே பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டு இலங்கை இது குறித்துப் பேசும் என்றும் -

அந்நாடுகளின் தரப்பில் சாதகமாகப் பதில் தரப்பட்டால் புலிகள் மதான தடையை இலங்கை தளர்த்துவதற்கு அரசுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்றும் -

சொல்ஹெய்முக்கு உணர்த்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து அமெரிக்காவுடனும் பின்னர் பிரிட்டனுடனும் நேரடியாகப் பேசி, இணக்க நிலையை ஏற்படுத்துவதற்காகவே இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவசர அவசரமாக - திடீரென - அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சமரச முயற்சிகள் தொடர்பான விடயத்தில் கொழும்பு அரசுத் தரப்பில் ஏற்பட்ட திடீர் மன மாற்றங்கள் காரணமாக ஏளவு திருப்தியான - மகிழ்ச்சியான - மனநிலையுடன் -

இந்த முன்னேற்றங்கள் தொடர்பாக புலிகளின் பிரதிபலிப்பை அறிந்து கொள்ளும் ஆவலுடன் -

சொல்ஹெய்ம் நேற்று கொழும்பில் இருந்து லண்டனுக்குப் புறப்பட்டார்.

இன்று லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து அரசின் மாற்று யோசனைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுர அஸ்திவாரம் இடும் வைபவ விழா அறிமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷ்ணு வருஷம் உத்தராயணம் வசந்தகாலம் சித்திரை மாத பூர்வபக்க துவாதசிதிதியும் உத்தரநட்சத்திரமும் கூடிய இன்று (04.05.2001) வெள்ளிக்கிழமை காலை 8.43 மணி தொடக்கம் 10.20 மணி வரையுள்ள மிதுனலக்ன சுபமுகூர்த்த வேளையில் விநாயகரின் திருவடி எனப் போற்றப்படுகின்ற 3 தள இராஜகோபுரத்தின் அஸ்திவாரம் இடும் விழா பெருமானின் திருவருள் துணையுடன் நடைபெற இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆகவே விநாயகர் அடியார்கள் இதில் பங்குபற்றி விநாயகரின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

-நிர்வாக சபையினர்.

(87335)

மரண அறிவித்தல்

திருமதி வயலட் A.செல்லையா

(இளைப்பாறிய யாழ்.மத்திய கல்லூரி ஆசிரியை, வண.எஸ்.பி.நேசகுமார் அவர்களின் தாயார்)

அன்னார் நேற்று அதிகாலை (04.05.2001) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற V.R.செல்லையா (புகையிரத பிரதம காப்பாளர்) அவர்களின் மனைவியும் திரு.S.G.பிறேம்குமார் (பிரதம மாவட்ட பொறியியலாளர், புகையிரத சேவை - திருகோணமலை), திருமதி பிறிம்றோஸ் சுகீர்தரட்ணம் (ஆசிரியை, வெஸ்லிக் கல்லூரி - கொழும்பு), அருட்திரு எஸ்.பி.நேசகுமார் (அங்கிலிக்கன் திருச்சபை, யாழ்ப்பாணம்), திருமதி றீற்றா மகிந்தகுமார் (அமெரிக்கா), செல்வி டெய்சி நேசராணி (C.I.M.S. மகளிர் கல்லூரி, கொழும்பு), திரு.விக்ரர் தேவகுமார் (U.K), திரு.நியூட்டன் ஜெயக்குமார் (துறைமுக அதிகார சபை - கொழும்பு) ஆகியோரின் தாயாரும், DR.டொறத்தி (திருகோணமலை ஆதார வைத்தியசாலை), திருநிமால் சுகிர்தரட்ணம் (VIP என்ரபிறைசஸ், கொழும்பு), திருமதி சாயிலக்ஷ்மி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), DR.மகிந்தகுமார் (U.S.A.), திருமதி தர்மினி (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு.அழகராஜா, திருமதி கமலநாதன், காலஞ்சென்ற குணராசசிங்கம் ஆகியோரின் சகோதரியும், டிலக்ஷன், அமலன், நிமலன், டானியல், ஜெசிக்கா, நெரயலின், தானியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை ஞாயிற்றுக்கிழமை (06.05.2001) கொழும்பில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

மரியோவாள் ஆலயம்,
சுண்டுக்குளி. (C/16543) அருட்திரு. எஸ்.பி.நேசகுமார்,

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.